Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
- வங்கிக்கணக்கு அவசியமில்லை
- கமிஷன் ஏதுமில்லை
- 365 நாட்களிலும் எந்நேரத்திலும்

303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk

சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 13 (04.05.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:215


ஹெலியிலிருந்து இறங்கிவரும் நோர்வே தூதுக்குழுவினர்


பேச்சுக்களில் சொல்ஹெய்ம் குழுவினர்


தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழுவினர்

# இடைக்கால தீர்வு யோசனை அடிப்படையில்

# பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு புலிகள் தயார்!

(கிளிநொச்சி)

**இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க விடுதலைப்புலிகள் தயாராகவே இருக்கிறார்கள்.**

**இந்தப் பேச்சுக்களில் எந்தவொரு கட்டுப்பாடுகள் போடப்படுவதையும் எமது தலைமைப்பீடம் விரும்பாது. முன்னர் இடம்பெற்ற பேச்சுக்களைப் போன்று - நோர்வேயின் அனுசரணையுடன் மட்டும் வெளிநாட்டில் பேச்சுக்கள் இடம் பெறும் என, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்திருக்கிறார்.**

நோர்வே தூதுக் குழுவினை நேற்று சந்திப் பேச்சு நடத்திய பின்னர், செய்தியாளர்கள் மத்தியில் பேசியபோதே - இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் -

நடைபெற்ற பேச்சுவார்த்தை மிகவும் ஆக்கபூர்வமானதாகக் காணப்பட்டது. குறிப்பாக - அரசாங்கத்தின் நிலைப்பாடுகள் தொடர்பாக நோர்வே தூதுக்குழு எம்மிடம் எடுத்துக் கூறியிருக்கிறது.

நாமும் எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துக் கூறியிருக்கிறோம். அரச தரப்பிலிருந்து எமக்குக் கூறப்பட்ட செய்தி என்னவென்றால் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே தூதுக்குழுவினர் தமிழ்ச்செல்வனுடன் பேச்சு

விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே சமாதானக் குழுவினர் கிளிநொச்சியில் நேற்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுநடத்தினர்.

நேற்றுக்காலை விமானப்படை ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சி வந்த நோர்வே தூதுக்குழுவினர் சமாதான செயலகத்தில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்தனர்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் ஆரம்பித்த இந்தப் பேச்சுக்கள் சுமார் 2 மணிநேரம் நீடித்தது. சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவே இந்தப் பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட்டது.

இந்தப் பேச்சுக்களில் எரிக் சொல்ஹெய்முடன் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், நோர்வே தூதரக ஆலோசகர் லிசா [illegible]ல்டன் ஆகியோர் கலந்துகொண்டனர். (108)

## சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்கு

## இந்தியாவுக்கு விருப்பம் இருந்தாலும் தீர்வு இலங்கையிலிருந்தே வரவேண்டும்!

## சமாதான முயற்சிகளில் நோர்வே; ஒருதலைப்பட்சமான நடவடிக்கை!

# இந்தியாவுக்கு விருப்பம் இருந்தாலும் தீர்வு இலங்கையிலிருந்தே வரவேண்டும்!

## ஜஸ்வந்த் சின்ஹா தெரிவிப்பு

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டுமென இலங்கை கேட்டுள்ளது. இந்தச் சமாதான முயற்சிகளில் ஈடுபட இந்தியாவுக்கு விருப்பமிருந்தாலும், சமாதான முயற்சியின் தீர்வு அந்த நாட்டிலிருந்தே வரவேண்டுமென - இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா தெரிவித்தார்.

சென்னையில் பா.ஜ.கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே ஜஸ்வந்த் சின்ஹா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இலங்கையின் சமாதான முயற்சியில் இந்தியா நேரடியாகத் தலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளில் நோர்வே; ஒருதலைப்பட்சமான நடவடிக்கை!

## அரசு மீது ஹெல உறுமய சாடல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு நோர்வே அரசாங்கத்துடன் தற்போதைய அரசாங்கம் தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பது ஒருதலைப்பட்சமான தீர்மானம் என்று கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரோ தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது -

கடந்த அரசாங்கம் முன்னெடுத்த சமாதான நடவடிக்கைகளையும் அதில் நோர்வே அரசாங்கம் மத்தியஸ்தம் வகித்ததையும் கடுமையாக விமர்சித்து வந்த ஜே.வி.பி, இப்போது மௌனம் சாதிப்பது புதுமையான விடயம்.

கடந்த காலங்களில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் சரி, ஜே.வி.பியும் சரி, நோர்வேயின் தலையீட்டை கடுமையாக விமர்சித்து வந்ததுடன் கொடிகளை எரித்து பல்வேறு எதிர்ப்பு நட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மீண்டும் சமாதானப் பேச்சுக்கள்; நம்பிக்கையான சூழல் ஏற்படுகிறது!

## நோர்வே தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நம்பிக்கையான சூழல் ஏற்பட்டுள்ளதாக - நோர்வேயின் இலங்கைக்கான விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் சமாதானப் பேச்சு வார்த்தைகள் சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடிய பின்பு நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இவ்வாறு அவர் தெரிவித்தார். '

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் - ஜனாதிபதியுடனும், தமிழ்ச்செல்வனுடனும் நடத்திய பேச்சுக்கள் மிகவும் ஆக்கபூர்வமாக இருந்தது. நேரடிச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு சுமுகமான ஒரு தளம் தேவை.

அதை உருவாக்குவதற்காக கருத்துக்களினை இருதரப்பினரும் அனுசரணையாளர் ஊடாக தெரிவிக்க வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்

## லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவிப்பு

(புதுடெல்கி)

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள், வடக்கு - கிழக்கு பகுதி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளுடன் ஆரம்பிக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து வெளியாகும் 'புரொன்ட்லைன்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அப்பத்திரிகைக்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் - சமாதான முயற்சிகளில் எட்டப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in the skies...

# ரஜினியின் புதிய படம் ஜக்குபாய் உத்தியோகபூர்வமாக அறிவிப்பு!



நடிகர் ரஜினிகாந்த் படையப்பா படத்தில் நடித்த பிறகு 3 ஆண்டுகள் புதிய படங்களில் நடிக்காமல் ஒதுங்கியிருந்தார்.

அதன்பிறகு பாபா படத்தில் நடித்தார். சுரேஷ் கிருஷ்ணா இப்படத்தை இயக்கினார். ஆனால் படம் எதிர்பார்த்தபடி வெற்றிபெறவில்லை. இதனால் படமாளிகை அதிபர்கள் நஷ்டமடைந்தனர்.

படத்தில் ரஜினி புகை பிடிப்பதை எதிர்த்து பா.ம.கவினர் போராட்டம் நடத்தியதால், ஒரு சில தியேட்டர்களில் படத்தை திரையிட முடியாத நிலையும் ஏற்பட்டது.

இதையடுத்து நஷ்டமடைந்த படமாளிகை அதிபர்களுக்கு பல லட்சம் பணத்தை ரஜினி திருப்பி வழங்கினார்.

நீண்ட நாட்கள் சினிமாவை விட்டு ஒதுங்கியிருந்த அவர் - இரண்டு வருட இடைவெளிக்கு பிறகு மீண்டும் சினிமாவில் நடிக்கிறார். புதிய படத்துக்கான பெயர் 'ஜக்குபாய்' என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்துக்காக வெளியிடப்பட்ட விளம்பரத்தில் ரஜினிகாந்த் தலையில் முக்காடிட்டு உடல் முழுவதும் துணியால் மூடியபடி அமர்ந்திருக்கிறார். அருகில் ஏ.கே 47 ரக துப்பாக்கி ஒன்று வைக்கப்பட்டுள்ளது. 'ஜக்குபாய்' தலைப்பில் உள்ள 'க்', 'ய்' எழுத்துக்களின் மேல் உள்ள புள்ளி துப்பாக்கி தோட்டாவால் வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் ரஜினிகாந்தின் ஜோடியாக நடிக்க ஜோதிகா, மீனா, சதா ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்படுகின்றன. ஜோதிகா, மீனா ஆகியோரில் ஒருவருக்கு வாய்ப்புக் கிடைக்கலாம் என்று தெரிகிறது.

'ஜக்குபாய்' படத்தை கே.எஸ். ரவிக்குமார் இயக்குகிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். ஜீவா ஒளிப்பதிவு செய்கிறார். கலை இயக்குநராக சாபு சிரில் உள்ளார்.

வைரமுத்து பாடல்கள் எழுதுகிறார். சத்தியநாராயணா, கெய்க்வாட், கே.முரளி, கே.சத்திய நாராயணன் ஆகியோர் இந்தப் படத்தை தயாரிக்கிறார்கள். படப்பிடிப்பு ஜுலை மாதம் தொடங்குகின்றது.



சிவகங்கையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கருணாநிதியும், ப.சிதம்பரமும் அருகருகே அமர்ந்திருப்பதைக் காணலாம்.

# பிரதமர் பதவி வகிக்க எனக்கு விருப்பமில்லை

## ராகுல் காந்தி பேட்டி



காங்கிரஸ் தலைவி சோனியாவின் மகன் ராகுல் உத்தரப் பிரதேம் அமேதி தொகுதியில் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் கடந்த மாதம் 26 ஆம் திகதி தேர்தல் நடைபெற்றது.

இந்த நிலையில், கான்பூரில் ராகுல் காந்தி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு-

*கேள்வி* - அரசியலில் குதித்துள்ள நீங்கள் பிரதமர் ஆகும் வாய்ப்பு இருக்கிறா?

*பதில்* - பிரதமர் பதவியை வகிக்க எனக்கு விருப்பமில்லை. பிற்காலத்தில் நான் பிரதமர் ஆகும் வாய்ப்பும் இல்லை. பிரதமர் பதவியை வகிப்பதை விட எம்.பியாக தொகுதி மக்களுக்கு பணியாற்றுவதையே நான் அதிகம் விரும்புகின்றேன். அதில்தான் எனக்கு மகிழ்ச்சி இருக்கிறது. அமேதி தொகுதியில் நான் வெற்றிபெற்று அந்தத் தொகுதி மக்களுக்கு தொடர்ந்து பணியாற்றுவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

*கேள்வி* - காங்கிரசுக்கும், சமாஜ்வாதி கட்சிக்கும் கூட்டணி ஏற்படும் என்று கருதுகிறீர்களா?

*பதில* - இந்த விஷயத்தில் நான் மிகவும் சாதாரணமானவன். அது மட்டுமன்றி மிகவும் வயது குறைந்தவன். அனுபவமில்லை. இந்த விடயத்தில் கட்சியின் பெரிய தலைவர்கள்தான் முடிவுசெய்யவேண்டும்.

*கேள்வி* - வாஜ்பாய் உங்கள் தாயார் சோனியா மீது வெளிநாட்டவர் என்ற பிரச்சினையைக் கிளப்பி வருகிறாரே?

*பதில* - வாஜ்பாய் இந்த நாட்டின் பிரதமர். மூத்த தலைவர். மூத்த தலைவர்களுக்கு உரிய மதிப்பும், மரியாதையும் கொடுப்பதுதான் என் வழக்கம். பெரியவர்களுக்கு மதிப்பும், மரியாதையும் கொடுப்பது எங்கள் குடும்பத்தின் வழக்கமாக இருந்து வருகிறது. எனவே, வாஜ்பாய் பற்றி விமர்சிக்க நான் விரும்பவில்லை.

இவ்வாறு ராகுல் காந்தி கூறினார்.

# வாஜ்பாய் போட்டியிடும் தொகுதியில் பிரசாரப் பணிகள் நிறைவடைந்தன!



கடந்த மாதம் 20 ஆம் திகதி 182 தொகுதிகளுக்கு முதல் கட்ட தேர்தல் நடந்தது. 22 ஆம் திகதி 2 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடந்தது.

3 ஆவது கட்ட மாக 26 ஆம் திகதி தேர்தல் நடந்தது. இதுவரை மொத்தம் 278 தொகுதிகளுக்கு வாக்குப் பதிவு நடந்துள்ளது. இந்தத் தொகுதிகளில் நடந்த கருத்துக் கணிப்பில் எந்தக் கூட்டணிக்கும் ஆட்சியமைக்கும் அளவுக்கு பெரும்பான்மை கிடைக்காது என்று தெரியவந்துள்ளது.

இதனால் 4 ஆவது, 5 ஆவது கட்ட தேர்தலில் பாரதீய ஜனதா, காங்கிரஸ் கட்சிகளிடையே கூடுதல் இடம் பிடிக்க கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. நான்காவது தேர்தல் நடக்கும் மாநிலங்களை இரு கட்சித் தலைவர்களும் முற்றுகையிட்டு தீவிர பிரசாரம் செய்தனர்.

வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதி உட்பட 83 தொகுதிகளிலும் கடந்த வாரம் உச்சக்கட்ட பிரசாரம் நடந்தது. மூத்த தலைவர்கள் அனைவரும் 7 மாநிலங்களில் தங்கியிருந்து பிரசாரம் செய்தனர். நேற்றும், நேற்றுமுன்தினமும் 83 தொகுதிகளிலும் இறுதிக்கட்ட அனல் பறக்கும் பிரசாரம் நடந்தது.

நாளை 83 தொகுதிகளிலும் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை தலைமை தேர்தல் ஆணையகம் செய்து தயாராக உள்ளது. 13 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடந்து முடிவுகள் அறிவிக்கப்படும்.

# சோனியாவைத் தரக்குறைவாக பேச ஜெயலலிதாவுக்கு அதிகாரம் இல்லை



கோபி தொகுதியில் தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசன் நேற்றுமுன்தினம் சுற்றுப்பயணம் செய்து தேர்தல் பிரசாரம் செய்தார். அப்போது காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனுக்கு ஆதரவாக வாக்குக் கேட்டார்.

கோபி பெரியார் திடலில் நேற்றுமுன்தினம் இரவு காங்கிரஸ் கட்சி சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது.

இந்தக் கூட்டத்தில் தமிழக காங்கிரஸ் தலைவர் ஜி.கே.வாசனும், கோலி தொகுதி காங்கிரஸ் வேட்பாளர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனும் ஒரே மேடையில் பேசினார்கள். கூட்டத்தில் ஜி.கே.வாசன் பேசியதாவது-

மத்தியில் மதவாத பாரதீய ஜனதா ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நாள் 10 ஆம் திகதி. இதனால்தான் ஜனநாயக முற்போக்கு கூட்டணி உருவாகியுள்ளது.

மத்தியில் பாரதய ஜனதா கட்சியின் ஆட்சியை வீழ்த்தவேண்டும். இது காலத்தின் கட்டாயம். சோனியா காந்தி தலைமையில். மத்தியில் மத சார்பற்ற நல்லாட்சி அமையவேண்டும்.

நாடாளுமன்ற தேர்தலில் ஜனநாயக முற்போக்கு கூட்டணி வெற்றிபெற்ற பிறகு தமிழ்நாட்டிலும் மாற்றம் ஏற்படும்.

பாரதீய ஜனதா கட்சி இந்தியா ஒளிர்கிறது என்று மக்களை ஏமாற்றுகின்றது. இந்தியா ஒளிரவில்லை. இந்தியா ஒழிந்துவருகிறது. அ.தி.மு.க ஆட்சியில் விவசாயிகள், நெசவாளர்கள், அரசு ஊழியர்கள், அனைத்து தரப்பு மக்களும் நிம்மதியாக இல்லை. இந்த அரசு மக்கள் விரும்பும் அரசாக இல்லை. மக்கள் வெறுக்கும் அரசாக உள்ளது. இதுதான் ஜெயலலிதா 20 மணி நேரம் உழைக்கும் லட்சணம்.

முதலமைச்சர் ஜெயலலிதா ஜனநாயக முற்போக்கு கூட்டணியை பொல்லாத கூட்டணி என்று கூறுகிறார். 10 ஆம் திகதிக்கு பிறகு நீங்கள் செல்லாத கூட்டணியாகப் போகிறீர்கள்.

அ.தி.மு.க அரசின் சாதனைகளைச் சொன்னால் மக்கள் வேதனைப்படுவார்கள் என்பதால் சோனியா காந்தியைப் பற்றி ஜெயலலிதா தரக்குறைவாகப் பேசுகிறார். சோனியா காந்தி பற்றி பேச ஜெயலலிதாவுக்கு எந்தத் தகுதியும் இல்லை.

சோனியா காந்தி பற்றி தரக்குறைவாகப் பேசுவதை இத்துடன் நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் தேர்தலுக்குப் பிறகு தமிழ்நாட்டில் உள்ள லட்சக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் வீதி வீதியாக உங்களைப் பற்றிப் பேசுவார்கள் என ஜி.கே.வாசன் மேலும் குறிப்பிட்டார்.

# பாரதீய ஜனதா - அ.தி.மு.கவிற்கு ரஜினி வெளிப்படையாக ஆதரவு!




பாரதீய ஜனதா - அ.தி.மு.கவுக்கு ஆதரவாக ரஜினி பேச்சு நடத்திய 2 லட்சம் ஒலிநாடாக்களை ரஜினி மன்றத் தலைவர் சத்திய நாராயணா வழங்கினார்.

ஒலிநாடா வெளியிட்டு முடிந்ததும், சத்தியநாராயணா நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அதன் விபரம் வருமாறு -

கேள்வி - பிரசார ஒலிநாடாவில் ரஜினி என்ன பேசியுள்ளார்?

பதில் - பத்திரிகையாளர்களிடம் ஏற்கனவே வெளியிட்ட அறிக்கையை ஒலிநாடாவில் பதிவு செய்துள்ளார். தனியாக இதற்காக ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

ராகவேந்திரா மண்டபத்தில் அவர் அறிக்கையைப் படித்தபோது சத்தம் இருந்ததால் சரியாகப் பதிவாகவில்லை. எனவே தனியாக அந்த அறிக்கையை வாசித்து ஒலி நாடாவில் பதிவுசெய்துள்ளார்.

*கேள்வி* - தொகுதிக்கு எத்தனை ஒலிநாடாக்கள் வழங்கப்படுகின்றது?

*பதில்* - பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளில் உள்ள ரசிகர்களிடம் இந்த ஒலி நாடாக்கள் கொடுக்கப்படுகின்றது. ஒரு தொகுதிக்கு 30 ஆயிரம் ஒலி நாடாக்கள் விநியோகிக்கப்படும். மொத்தம் 1 லட்சத்து 80 ஆயிரம் ஒலிநாடாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

*கேள்வி* - இந்த ஆலோசனைக் கூட்டத்தில் ரசிகர்களுக்கு என்ன அறிவுரை கூறினீர்கள்?

*பதில* - தேர்தல் பிரசாரத்தின்போது ரிஸ்க் எடுக்கவேண்டாம் என்று ரசிகர்கள் மன்றத்தின் வாக்குகளை ஒருங்கிணைக்கவேண்டும் என்று கூறினேன். பிரச்சினைகள் வரக்கூடாது, பாதுகாப்புத்தான் முக்கியம் என்று அறிவுறுத்தியிருக்கிறேன்.

*கேள்வி* - ரஜினி 6 தொகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்வாரா?

*பதில்* - ரஜினி பிரசாரம் செய்வது பற்றி இன்னும் முடிவுசெய்யவில்லை.

*கேள்வி* - நீங்கள் பிரசாரம் செய்வீர்களா?

*பதில்* - தேவைப்பட்டால் பிரசாரம் செய்வேன்.

இவ்வாறு சத்தியநாராயணா கூறினார்.

**கண்ணீர் அஞ்சலி**

நெடுந்தீவு வாழ் மக்களின் மனது மறக்கமுடியாத,
படகுப் பயணத்தின்போது உயிர்நீத்த,
யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியர்

**இரத்தினம் ஜெயசீலன்**

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வணிகர் கழகம்,
நெடுந்தீவு.

(சி-2498)

# நோர்வேயின் அனுசரணையுடன் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



இலங்கையின் இனப் பிரச்சினைக்கு நோர்வேயின் அனுசரணையுடன் ஒரு போதும் தீர்வுகாண முடியாதென ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. கொழும்பு ஆங்கில நாளேடு ஒன்றிற்கு வழங்கியுள்ள செவ்வி ஒன்றின் போதே ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான கண்காணிப்பாளர்களாக இந்தியா உள்ளிட்ட பிராந்திய நாட்டைச் சேர்ந்தவர்களே பணியாற்றவேண்டும் எனவும் ஜே.வி.பி. வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் நோர்வே பங்கு பெறுவது இலங்கையின் இறையாண்மைக்கும், பாதுகாப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகிறது.

இலங்கையின் இறையாண்மைக்கும், பாதுகாப்பிற்கும் பாதிப்பில்லாத வகையில் நோர்வேயின் செயற்பாடுகள் அமையும்போதே, அந்நாட்டின் சமாதான அனுசரணை முயற்சிகளுக்கு தமது கட்சி எதிர்ப்பு தெரிவிக்காது.

இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா மற்றும் ஏனைய பிராந்திய நாடுகளையும் பங்குபெற வைப்பதன் மூலமே, சமாதானச் செயற்பாடுகளில் பக்கச் சார்புத் தன்மையை தவிர்த்துக் கொள்ளலாம் எனவும்,

இலங்கையின் சமாதான முயற்சிகளில் பல்வேறு நோக்கங்களுடன், குறிப்பிட்ட ஒரு சக்தி பங்கேற்பதையும் இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதான முயற்சிகளை எவ்வாறு முன்னெடுக்கப் போகிறது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் எனவும் செவ்வியின்போது விமல் வீரவன்ச கோரிக்கை விடுத்தார்.

# கள்ளநோட்டுக்களை மாற்றிய இருவர் வவுனியாவில் கைது

வவுனியா மாவட்டத்தில் கள்ள நோட்டுக்களை மாற்றிய இருவரை பொலிஸார் கைதுசெய்தனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மொகமட் ஹக்கீம் மற்றும் மொகமட் தமீம் என்ற இரண்டு முஸ்லிம்கள் நேற்றுமுன்தினம் வவுனியாவில் உள்ள கடையொன்றில் 500 ரூபா, 1000 ரூபா பணநோட்டுக்களைக் கொடுத்து பொருட்கள் வாங்கியுள்ளனர்.

இந்த நோட்டுக்கள் இரண்டும் கள்ளநோட்டுக்கள் என்பதைக் கண்டுபிடித்த வர்த்தகர் -அங்கு நின்ற சிலருடன் சேர்ந்து அந்த இரு முஸ்லிம்களையும் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

இந்த இருவரையும் பொலிஸார் விசாரணை செய்தபோது, மேலும் 69 ஆயிரம் ரூபா கள்ள நோட்டுக்களை இவர்களிடமிருந்து பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன், இவர்கள் தாம் கிரியா கொல்லாவப் பகுதியில் வசிப்பதாகவும், பொலிஸாரிடம் தெரிவித்தனர். இருவரையும் நேற்றுமுன்தினம் வவுனியா நீதிமன்றில் பொலிஸார் ஆஜர்செய்தபோது, 14 நாட்கள் விளகக மறியலில் வைக்குமாறு நீதிவான் இளஞ்செழியன் பொலிஸாருக்கு உததரவிட்டார்.

# வெடிமருந்துடன் சென்ற நால்வர் கந்தளாயில் கைது

(திருகோணமலை)

ஜெலிக்நைற் வெடிமருந்துக் குச்சிகளை வான் ஒன்றில் கொண்டு சென்ற 4 பேரை படையினர் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 28 ஆம் திகதி திருகோணமலை கந்தளாய்ப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கந்தளாய்க்கு தென்மேற்கே 5 கி.மீ தொலைவிலுள்ள அக்யேபுரவில் வானொன்றைச் சோதனையிட்டபோதே 196 ஜெலிக்நைற் குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டன.

கைதான நால்வரும் திருகோணமலை நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது, அவர்களை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. கந்தளாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயிலில் மோதுண்டு யானைகள் மரணம்

மின்னேரியா மாவட்ட சரணாலயத்தில் வாழும் யானைகள் - தற்போது நிலவும் வரட்சிநிலை காரணமாக சரணாலயத்தைவிட்டு வெளியேறி, தண்ணீர் உள்ள இடங்களைத் தேடியலைகின்றன.

கடந்த மாதம் முதல் இந்தச் சரணாலயத்தைச் சேர்ந்த 14 யானைகள் கபரன ரயில்ப் பாதையில் விபத்துக்குள்ளாகி இறந்துள்ளன.

இதனால் இந்தச் சரணாயலத்தில் யானைகள் அழிந்துபோகும் அபாயநிலை உருவாகியுள்ளது.

# இரண்டு பிக்குமார்களுக்கு எதிராக ஊழல் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

ஜாதிக ஹெல உறுமயவிலிருந்து பிரிந்துசென்ற இரண்டு பிக்குகளுக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, சுதந்திர ஊழல் ஆணைக்குழுவிடம் முறையிடவுள்ளதாக அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

வண.அபரக்க பஞ்ஞானந்த தேரோ மற்றும் வண.கதலுவே ரத்னசீக தேரோ இருவருக்கும் எதி ராக இந்த முறைப்பாடு செய்யப்படவுள்ளது.

நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சபாநாயகர் வேட்பாளருக்கு ஆதரவாக வாககளிப்பதற்காக இந்த நாடாளுமன்ற பிக்குகளும் இலஞ்சம் வாங்கியுள்ளதாகத் தாம் அறிவதாக ஹெல உறுமயவின் வண.அத்துரலிய ரத்ன தேரோ தெரிவித்தார்.

இவ்வாறு இவர்கள் இலஞ்சம் வாங்கியது ஹெல உறுமயவின் கொள்கைக்கு முற்றிலும் முரணான நடவடிக்கையாகும்.

அத்துடன், இவாகள் இருவரையும் கடசியிலிருந்து அகற்றுவது தொடர்பாக சட்டத்தரணிகளுடன் தாம் கலந்தாலோசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எமது உரிமைகளை நிலைநிறுத்துவதற்கு அதிகாரம் எம்மிடம் இருக்கவேண்டும்

## தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் மகாசிவம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எமது உரிமைகளை நிலைநிறுத்த அதிகாரம் எமது கைகளில் இருக்க வேண்டும். அதற்கு உரிய நிர்வாகக்கட்டமைப்பு தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்மொழியப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை மூலம் எமக்குக் கிடைக்கும்.

எனவே, தற்போது பதவி ஏற்றுள்ள புதிய அர சாங்கம் தமிழர்கள் வெளிப்படுத்திய ஏகோபித்த முடிவை ஏற்று, விடுதலைப் புலிகளின் கையில் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்கவேண்டும் என்பதைத் தொழிலா ளர் தினமாகிய இன்று கூறிவைக்க விரும்புகிறேன் என்று திருகோண மலையில் நடைபெற்ற சர்வதேச தொழிலாளர் தினத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் மகாசிவம் குறிப்பிட்டார்.

மாகாண மற்றும், தேசிய மட்டத்தில் செயற்படும் 14 தொழில்சங்கங்கள் ஒன்றிணைந்து இம்முறை மேதினக்கூட்டத்தை திருகோணமலையில் நடாத்தின.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், வடக்கு- கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர் சம்மேளனம் என்பன கூட்டு மேதினக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை மேற்கொண்டிருந்தன.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தலைவர் சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறப்புறையாற்றிய மகாசிவம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் பெரும்பான்மையினராக வாழும் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தர்வு வழங்குவதாகக் கூறிக்கொண்டு மாகாண நிர்வாக முறைமை உருவாக்கப்பட்டது.

ஆனால், இன்று இநத மாகாண நிர்வாகக்கட்டமைப்பு வட- கிழக்கில் முறையாக இயங்கவில்லை. இங்கு மாகாண ஆட்சி நடைபெற வில்லை. ஏனைய மாகாணங்களில் மாகாண ஆட்சி நடைபெறுகின்றது.

இத்தகைய இழிவானநிலையில் தொழிலாளர்கள் ஆகிய எம் அனைவரினதும் உரிமைகள் இங்கு திருப்திகரமாக நிறைவேற்றப்படுவது முடியாதகாரியமாகும்.

எமது உரிமைகள் எமக்குக் கிடைப்பதற்கு அதிகாரம் எமது கையில் இருக்கவேண்டும்

ஊழியர்களின் நியாயபூர்வ உரிமைகள் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்குக்கூட நேரம் ஒதுக்கமுடியாத மாகாண அமைச்சுசெயலாளர்களின் பொறுப்பற்ற போக்கை நாம் தொடர்ந்தும் அனுமதிக்கமுடியாது

வடக்கு- கிழக்கைத் தளமாகக் கொண்டு இயங்கும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்திப்பதில் மாகாண அமைச்சு செயலாளர்கள் தொடர்ந்தும் இழுத்தடிப்பில் ஈடுபட்டால், வட-கிழக்கு மாகாண அரச உத்தியோகத்தர்கள் சம்மேளனத்தின் ஊடாக மீண்டும் உரிய செயலாளர்களை அணுகிப்பார்ப்போம். முடியாவிடடால், அனைத்துத் தொழிற்சங்கங்களும் கூட்டாக இணைந்து இதற்கெதிரான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். இத்தகைய ஒரு போராட்டத்திற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தனது முழு அளவிலான ஒத்துழைப்பையும், பங்களிப்பையும் வழங்கும்.

சர்வதேச தொழிலாளர் தினமாகிய இன்றும்கூட திருமலையிலுள்ள சகல தனியார் வர்த்தக நிறுவனங்களும் திறந்து இருக்கின்றது. அங்கு கடமைபுரியும் அடிமட்டத் தொழிலாளர்களுக்குத் தொழிலாளர் தினத்தல் கூட விடுமுறை இல்லை.

அடுத்த மேதினத்தில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து செயற்படுகின்ற சகல தொழிற்சங்கங்களையும் குறிப்பாக தனியார் துறைசார் தொழிற்சங்கங்களையும் இணைத்து அவர்களின் உரிமைகளுக்காக குரல கொடுக்க நாமும் இருக்கின்றோம் என்பதை அவர்களுக்கு உணர்த்தும் வகையில் மேதினக் கூட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

அனைத்து அரச ஊழியர்களதும் வேதனத்தை உடனடியாக அதிகரிப்பதாகக் கூறி ஆட்சிக்கு வந்தது புதிய அரசாங்கம். ரூபா 5000 ஐ உடனடியாக அரச ஊழியர்களுக்கு வேதன உயர்வாக வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் என்றார்.

திருகோணமலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற தொழிற்சங்கங்களின் கூட்டு மேதினக் கூட்டத்திற்கு தலைமையேற்று உரையாற்றிய சி.தண்டாயுதபாணி உரையாற்றுகையில்-

சர்வதேச தொழிலாளர் தினத்தில் ஒன்று கூடியுள்ள நாம் அனைவரும் தொழிலாளர் சமூகத்திற்குக் கூறக்கூடிய செய்தி இரண்டுள்ளது.

உலகின் சகல பாகங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் தொழிலாளர்களின் ஒன்றிப்பில் இன்று நாமும் இணைந்து கொள்கின்றோம். தொழிலாளர் வர்க்கம் என்ற ஒரு குடையின் கீழ் நாம் ஒன்றித்துள்ளோம் என்பது முதலாவது செய்தி.

தொழிலாளர் வர்க்கத்திற்குரித்தான பொதுவானதும் தனித்துவமானதுமான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக தமிழர்கள், தமிழ்த்தொழிலாளர்கள் என்ற வகையில் எமக்கு விசேட பிரச்சினைகள் பல்வகையான உரிமை மறுப்புக்கள் இந்த நாட்டிலுள்ளது.

சிங்கள தொழிலாளர்களுக்கு இந்நாட்டில் கிடைக்கக்கூடிய சலுகைகள், உரிமைகள் எமக்கு மறுக்கப்பட்டு இருக்கின்றது.

தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகள் தீரும்போதே, தமிழ் தொழிலாளர்களின் பிரச்சினைகளும் தீரும். எனவே, அத்தகைய ஒரு தீர்விற்குத் தமிழ்த் தொழிலாளர்களாகிய நாம் ஒன்றுபட்டு நிற்கின்றோம் என்பதே நாம் விடுக்கக்கூடிய இரண்டாவது செய்தியாகும்

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் புகழ்பூத்த தொழிற்சங்கவாதியும், முன்னாள் தலைவருமான அமரர் வணசிங்கா கூறுவார்-

இந்த நாட்டில் என்று தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகின்றதோ, அன்றுதான் தமிழ் ஆசிரியர்களதும், தமிழ் மாணவர்களினதும் பிரச்சினைகள் தீரும்'' என்று அந்தத் தீர்க்கதரிசனமிக்க வார்த்தைளை உங்களுக்கு நான் ஞாபகப்படுத்த விரும்புகின்றேன் என்று தமது தலைமை உரையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

கூட்டு மேதினக் கூட்டதில் பங்குபற்றிய பல்வேறு தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்டத் தலைவர் சதாசண்முகநாதனும் உரையாற்றினர். (10)




வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள அரச உத்தியோகத்தர் தொழிற்சங்க சம்மேளனம் திருமலையில் நடத்திய மே தினக் கூட்டத்தில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் மகாசிவம், தொழிற்சம்மேளனத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் மற்றும் தெய்வேந்திரன் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம்.

## ஜனாதிபதி செயலகத்துக்கு தலைமை அதிகாரி நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதி செயலக அதிகாரிகளுக்குப் பொறுப்பான தலைமை அதிகாரியாக பியசேன திஸநாயக்க- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் நியமிக்கப்பட்டார்.

உடனடியாகச் செயற்படும் வகையில் இவரது நியமனம் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டு ஜனாதிபதி செயலகத்தில் இணைந்து கொண்ட பியசேன திஸநாயக்க அரசாங்க நாடாளுமன்றக் குழுவின் இணைப்பு அலுவலராகப் பணியாற்றி வந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## மேலதிக அரச அதிபரின் பிரியாவிடை நிகழ்வு

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மாவின் பிரியாவிடை நிகழ்வு நேற்று யாழ். செயலகத்தில் பிரதம கணக்காளர் சண்முகரத்தினம் தலைமையில் இடம்பெற்றது.

அரசாங்க அதிபர் பத்மநாதன், உதவித்தேர்தல் ஆணையாளர், யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள அதிகாரி, பிரதேச செயலாளர்கள், அரச பணியாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## வீட்டிலிருந்த ஆசிரியை இளைஞர்களால் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு - கல்லடியில் வசிததுவரும் இளம் ஆசிரியை ஒருவர்- இனந்தெரியாத நபர்களால் கடத்திச்செல்லப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கணபதிப்பிள்ளை சுதர்சினி (வயது 28) என்பவரே கடத்தப்பட்டவராவார்.

தனது வீட்டில் இவர் நின்றிருந்த வேளை, அங்கு வந்த சில இளைஞர்கள் இவரைக் கடத்திச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காதல் விவகாரமே இந்த ஆசிரியை கடத்தப்பட்டதற்குக் காரணமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் ஐந்து தமிழ் இளைஞர்களைத் தாம் கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பாகத் தாம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ஆசிய கிரிக்கெட் வளர்ச்சி; ஆராயும் கூட்டம் கராச்சியில்!

(கராச்சி)

ஆசியாவின் கிரிக்கெட் வளர்ச்சி குறித்து ஆலோசனை நடத்த சர்வதேச அளவிலுள்ள கிரிக்கெட் நிபுணர்கள் அடுத்தவாரம் பாகிஸ்தான் தலைநகர் கராச்சியில் கூடுகின்றனர்.

ஆசிய கிரிக்கெட் சபையின் சார்பாக, எதிர்வரும் 9 ஆம், 10 ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் கிளைவ்லொயிட், அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் பிரபல வீரர் கிரேக் சப்பல் ஆகியோர் சிறப்புப் பேச்சாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் ஈஷான்மணி, தலைமை நிர்வாகி மால்கம்ஸ்பீட் ஆகியோரும் கலந்துகொள்ளவிருப்பதாக ஆசிய கிரிக்கெட் சபையின் அதிகாரி ஷாகிர்ஹுசைன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில் -

இநதக் கருத்தரங்கானது ஆசிய மற்றும் சர்வதேச கிரிக்கெட் வளர்ச்சித் திட்டம் ஆகிய இரண்டுக்கும் இடையே பாலமாக அமைய உதவும். அத்துடன் ஆசியாவில் கிரிக்கெட் வளர்ச்சி பற்றிய கருத்துக்களை பகிர்ந்துகொள்ள இந்தக் கருத்தரங்கும் உதவியாக இருக்கும்.

அத்தோடு - ஆசிய கிரிக்கெட் வளர்ச்சிக்குத் தேவையான சர்வதேச தேவைகள் குறித்தும் - மைதானங்கள், நடுவர்கள், ஆடுகளங்கள், உடற்தகுதி, பத்திரிகைத் தொடர்பு குறித்தும் ஆலோசனை நடத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சங்கத் தலைவர் கலந்துகொள்கிறார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் வளர்ச்சித் திட்டம், கடந்த 1997 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது சர்வதேச கிரிக்கெட் சபையில் 89 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

# தற்போதுள்ள இந்திய அணியில் ராகுல் ராவிட்தான் சிறந்த வீரர்!

## கவாஸ்கர் கூறுகிறார்



இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் ராகுல் ராவிட். நிலைத்து நின்று ஆடுவதில் வல்லவரான இவர், எப்போதும் எதிரணி பந்துவீச்சாளர்களுக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்வார்.

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்டில் அவர் 270 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்மூலம் ஐந்தாவது இரட்டைச் சதம் அடித்த முதல் இந்தியர் என்ற சாதனையைப் படைத்தார்.

கவாஸ்கர் நான்குமுறை இரட்டைச் சதம் அடித்ததே சாதனையாக இருந்தது.

தற்போதுள்ள இந்திய அணியில் ராவிட்தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்று கவாஸ்கர் பாராட்டியுள்ளார். பெங்களூரில் தேசிய கிரிக்கெட் அக்கடமியின் பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே கவாஸ்கர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது -

ராவிட் எப்போதுமே ஒரே மாதிரியாக ஆடக்கூடியவர் அவரது ஆட்டத்தில் பதற்றம் இருக்காது. தற்போதுள்ள இந்திய அணியில் ராவிட்தான் சிறந்த துடுப்பாட்ட வீரர் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ராகுல் ராவிட்டும் கலந்துகொண்டார்.

தற்போது இந்திய அணியில் விளையாடும் யுவராஜ்சிங், கைவ், இர்பான் பதான், எல்.பாலாஜி, முரளி கார்த்திக், ஹர்பஜன்சிங், சகீர்கான் ஆகியோர் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் பயிற்சி பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 6 ஆவது ஒருநாள் போட்டியையும் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது!



(சென்லூசிகா)

மைக்கல் வோகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்கெதிரான ஒரு நாள் போட்டித் தொடரின் ஆறாவது போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றி பெற்றது.

ஏழு ஒரு நாள் போட்டிகளைக் கொண்ட முதல் ஆட்டத்தில், இங்கிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது போட்டிகள் மழை காரணமாக ரத்துச் செய்யப்பட்டன.

கடந்த சனிக்கிழமை நடந்த 5 ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருந்தது.

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையேயான 6 ஆவது போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இதன்போது, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 280 ஓட்டங்களைக் குவித்தது.

இந்த அணியின் சார்பில் வோகன், ஸ்டாரஸ் ஆகியோர் முறையே 67, 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

கைல் 2 விக்கெட்டுக்களையும் ராம்பவுல், டிலான், பிராட்ஷா, போவல் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பின்னர் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 47.1 ஓவர்களில் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 282 ஓட்டங்களைப் பெற்று, 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்த அணியின் சார்பில் சந்திரபோல் 63, லாரா 57 ஓட்டங்களைப் பெற்றனர்.

பேட்டி 2 விக்கெட்டுக்களையும் காவ், ஹார்மிசன், பிளின் டொப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்த வெற்றி மூலம் மேற்கிந்தியத் தீவுகள் 2-1 என்ற கணக்கில் முன்னணியில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான 7 ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இதில் வெற்றி பெற்றால் மேற்கிந்தியத் தீவுகள் தொடரைக் கைப்பற்றும். ஆட்டம் பாதிக்கப்பட்டாலும் அந்த அணியே தொடரைக் கைப்பற்றும். மேற்கிந்தியத் தீவுகள் அணி தோற்றால் தொடர் சமநிலையில் முடிவடையும்.

டெஸ்ட் தொடரை இழந்ததால் அந்த அணி ஒருநாள் தொடரைக் கைப்பற்றப் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



## தேசிய மட்ட சதுரங்க சுற்றுப் போட்டி

(உடுவில்)

யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனம் நடத்திய இளையோருக்கான போட்டிகளில் வயதுப் பிரிவின் அடிப்படையில் வெற்றிபெற்றவர்களுக்கான இறுதித் தேசிய மட்டப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை கேகாலை மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## திருமலை - வலய மட்டக் கிரிக்கெட்

# கோணேஸ்வரா இந்து சம்பியனாகத் தெரிவு!

(திருகோணமலை)

திருகோணமலை வலயமட்டப் பாடசாலைகளிடையே நடத்தப்பட்ட - 19 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் - திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவாகியது.

கடந்த 28 ஆம், 29 ஆம் திகதிகளில் பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்துக்கு எதிராக நடத்தப்பட்ட இறுதிப் போர்ட்டியில் வெற்றிபெற்றே கோணேஸ்வரா இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

முதலாவது போட்டியில் தம்பலகாமம் கோணேஸ்வரா மகாவித்தியாலயத்தை 8 விக்கெட்டுக்களாலும், காலிறுதி ஆட்டத்தில் சாஹிரா முஸ்லிம் மகாவித்தியாலயத்தை ஆறு விக்கெட்டுக்களாலும், அரையிறுதி ஆட்டத்தில் சென்.ஜோசப் கல்லூரியை 2 ஓட்டங்களாலும், இறுதி ஆட்டத்தில் பெருந்தெரு விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தை 7 விக்கெட்டுக்களாலும் கோணேஸ்வரா இந்துக் கல்லூரி வெற்றிகொண்டமை குறிப்பிடத்தக்கது. (04)

# விஸ்டன் கிரிக்கெட் சஞ்சிகையில் பொண்டிங் சிறந்த வீரராக தெரிவு!

சர்வதேசக் கிரிக்கெட்டில் முன்னணி வீரராக அவுஸ்ரேலிய அணியின் கப்டன் ரிக்கி பொண்டிங்கை விஸ்டன் கிரிக்கெட் இதழ் தெரிவு செய்துள்ளது.

40 பேர் கொண்ட இந்தப் பட்டியலில் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 14 வீரர்கள் இடம்பெற்றுள்ளனர்.

விஸ்டன் கிரிக்கெட் இதழின் சிறந்த 40 வீரர்களுக்கான பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த ஷேவாக், சச்சின், ராவிட், லக்ஷ்மன், கும்ளே ஆகியோரின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன.

கிரிக்கெட் விளையாட்டின் பைபிள் என்று அழைக்கப்படும் விஸ்டன் இதழின் 141 ஆவது பதிப்பு வெளியிடப்பட்டது.

இதில் சிறந்த 40 வீரர்களுக்கான பட்டியலில் சச்சின் டெண்டுல்கர், அதிரடி வீரர் ஷேவாக், துணைக் கப்டன் ராகுல் ராவிட், லக்ஷ்மன் மற்றும் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே ஆகியோர் இந்திய அணியின் சார்பாக இடம்பெற்றுள்ளனர்.

தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த 7 வீரர்களும் இடம்பெற்றுள்ளனர். இந்த இரு அணிகளுக்கு அடுத்தபடியாக அதிக வீரர்கள் இடம்பெற்ற அணியாக இந்தியா உள்ளது.

பாகிஸ்தான் அணியின் சார்பாக கப்டன் இன்ஸமாம், சொகைப் அக்தர், யூசுப் யுகானா மற்றும் முஷ்ராக் அகமட் ஆகியோர் விஸ்டன் இதழில் 40 வீரர்கள் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

இந்த விஸ்டன் இதழின் அட்டைப்படத்தில் அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் கப்டன் ஸ்ரீவோ படமும் தற்போதைய கப்டன் ரிக்கி பொண்டிங்கின் படமும் இடம்பெற்றுள்ளது.

## விளையாட்டு

## 19 வயது உதைபந்தாட்டப் போட்டி:

# யாழ். மாவட்ட லீக் அணி அரையிறுத்திக்குத் தகுதி!

(யாழ்ப்பாணம்)

எவரெடி வெற்றிக்கிண்ணத்திற்காக உதைபந்தாட்ட லீக் நடத்தும் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்திற்கு யாழ். உதைபந்தாட்ட லீக் 19 வயதுப்பிரிவு அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்த வாரம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற மேற்படி போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டங்களில் பதுளை லீக் அணியுடனான போட்டியில் யாழ். லீக் அணி 1:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றமையால் அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற்றது.

இந்தச் சுற்றுப் போட்டியின் அரையிறுதி ஆட்டம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

அரையிறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ள யாழ்.லீக் 19 வயதுப் பிரிவு அணி கொழும்பு பயணமாக உள்ளதாக யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளர் பிரான்சிஸ் தெரிவித்தார். (58)

## வடக்கு – கிழக்கு மாகாண பட்மின்ரன் போட்டியில் யாழ்.பெண்கள் அணி வெற்றி

வடக்கு - கிழக்கு மாகாண மாவட்டங்களுக்கிடையிலான பற்மின்ரன் போட்டியில் பெண்கள் அணியில் முதலாமிடத்தை யாழ். மாவட்டம் பெற்றது.

இரண்டாம் இடத்தை திருகோணமலை மாவட்டமும், மூன்றாமிடத்தை மன்னார் மாவட்ட மும் பெற்றன.

ஆண்கள் அணியில் முதலாமிடத்தை திருகோணமலை மாவட்டமும், இரண்டாம் இடத்தை மட்டக்களப்பு மாவட்டமும், மூன்றாமிடத்தை யாழ்.மாவட்டமும் பெற்றுக் கொண்டன. (101)

## பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின்

# முன்னாள் தலைவர் லத்தீப் இங்கிலாந்து சென்றுள்ளார்!

இங்கிலாந்தில் கிரிக்கெட் அக்கடமிகள் எவ்வாறு நடத்தப்படுகின்றன என்பதை தெரிந்து கொள்ள பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் ரஷீத் லத்தீப் அங்கு சென்றுள்ளார்.

37 டெஸ்ட் மற்றும் 164 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியுள்ள ரஷீத் லத்தீப் கிரிக்கெட் அகடமி ஒன்றை நடத்தி வருகின்றார்.

இந்தக் கிரிக்கெட் அக்கடமிகள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதைப் பற்றி அறிவதற்காக லத்தீப் அங்கு செல்லவுள்ளார்.

ஆனால் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்புக் குழு அதிகாரிகளை சந்திக்க லத்தீப் லண்டன் சென்றிருப்பதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆனால் தன்னுடைய கிரிக்கெட் அக்கடமியை விரிவுபடுத்தவும் முன்னேற்றும் விடயத்தில் லத்தீப் தற்போது மிகவும் அக்கறையாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் லத்தீப் கூறியதாக உள்ளூர் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

"கடந்த சில வருடங்களாக எனது அக்கடமியில் நிறையக் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட்டுள்ளன.

பல்வேறு கிரிக்கெட் மைதானங்களில் இந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளது. ஆனால் தற்போது ஒரு நிரந்தர இடம் ஒன்றில் அக்கடமியை நடத்தவும், நவீனமுறையில் நடத்தவும் முயற்சிகள் எடுத்துள்ளோம் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இங்கிலாந்தில் உள்ள கிரிக்கெட் அக்கடமிகளை நடத்திவரும் அதிகாரிகள், பயிற்சியாளர்கள் வீரர்களைச் சந்தித்து அவர்களது ஆலோசனைகளை பெற இருப்பதாகவும் இதன்மூலம் தன்னுடைய அக்கடமியில் சிறந்த விடயங்களை அறிமுகப்படுத்த முடியும் என்று லத்தீப் கூறியுள்ளார்.

இந்த நிலையில் சர்வதேச கிரிக்கெட் சபையின் ஊழல் எதிர்ப்பு குழுவை லத்தீப் சந்திக்க வாய்ப்பு ஏதும் இல்லை என்றும் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

### ஆறாவது அகவையில்



பெயர் : ச.ஐங்கரன்
முகவரி : மூளாய் றோட், வட்டுக்கோட்டை.

### இரண்டாவது அகவையில்



பெயர் : பா.கானகன்
முகவரி : தளைச்சாந்தோட்டம், வல்வெட்டித்துறை.

# இராணுவ, அரசியல் பலங்களை வெளிக்காட்டி உலக வரலாற்றில் சிறந்து நிற்கின்றோம்!

## புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன் பேச்சு



விடுதலைப் புலிகளால் ஈட்டப்பட்ட இராணுவ வெற்றிகள் கையாளப்பட்ட உத்திகளை சர்வதேச நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து, இது தொடர்பாக அறிய முடியாது என்று ஒப்புக்கொண்ட நிலையிலேயே- சர்வதேசம் எம்முடன் பேசி எமது அபிலாஷைகளைத் தீர்க்கும் காலம் நெருங்கியுள்ளது என - விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

வீராவின் 'முதல் முதலாய்' ஒலிக் கவிதை மற்றும் கவிதை நூல் வெளியீட்டு விழாவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து அவர் பேசுகையில், தரமானதைத் தெரிவு செய்துபார்க்கக் கூடிய நிலை எம்மிடையே உருவாகவேண்டும். இறந்துபோகாது கலை உணர்வை தட்டியெழுப்பக்கூடிய வாய்ப்பு எமக்கு கிடைக்குமா என எதிர்பார்க்கின்றோம்.

இந்த யாழ். மண் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களைப் பெறறெடுத்த மண். மக்கள் அனைவரும் பொது முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

இங்கு மாலையில் விளையாட ஓர் சிறந்த விளையாட்டு மைதானம் இல்லை. பூஞ்சோலைகள் இல்லை. நல்லவற்றை ஊக்குவிக்கும் மனப்பான்மை இல்லை.

யாழ்.சமுகத்தில் அற்புதமான படைப்புக்கள் உண்டு. இதனை கட்டாயமாக ஒழுங்குபடுத்தவேண்டும்.

சந்திகளில் ஆலயங்கள் இருந்த இடத்தில் இன்று இராணுவம் இருந்துகொண்டு சொந்த வீட்டுக்குப்போக ஏன் போகிறாய் என வினவுகின்றது.

எவ்வாறாயினும் மக்களுக்கு தெரியும் - நோய்களை எல்லாம் தீர்க்கின்ற மருந்து எம்மிடம் உள்ளது என்று.

எமது விடுதலைப் போராட்டம் இறுதிக் கட்டத்தில் ஓர் அற்புதமான நிகழ்வு ஒன்றை நிகழ்த்த தயாராகிக்கொண்டு இருக்கின்ற நிலையில் யாழ் இளம் சமூகத்தின் நிலை கவலை தருகின்றது.

எமது பிரதேசத்தில் ஆடையின்றி ஓடுவதற்கு காரணமாக சிங்கள சமூகத்தின் தலைமை பெரிய துயரம் ஒன்றுக்கு உள்ளாகப் போகின்றது.

அம்மையார் பதவிக்கு மிகவும் கஷ்டப்பட்டு வந்திருக்கின்றார். இனித்தான் அவர் தனது பலனை அனுபவிக்கப் போகின்றார்.

பண்டா குடும்பத்திலிருந்து சிங்கள அரசு செய்தபாவம் அனைத்தும் இனி பதவிக்குவரும் அம்மாவுக்கு சேரும். இதனை நீங்கள் யாவரும் பார்க்கத்தான் போகிறீர்கள்.

ஜே.வி.பிகாரன் சந்திரிகாவை எண்ணெய்ச் சட்டியில் போட்டு வறுப்பான்.

சந்திரிகா தப்பமுடியாது. பாய்ந்தால் சிஹல உறுமயகாரனின் நெருப்புக்குள் விழுவார். எதிர்ப்பக்கம் குதித்தால் எமது நெருப்புக்குள் விழுவார்.

அனைவரும் பாருங்கள் - என்ன அற்புதமான காட்சி. இந்த மண்ணுக்கு கிடைத்திருக்கிறது. உலகம் மண்டையைப் 'பிய்க்கின்றது. சிக்குப்பட்ட உலகம் மீள முடியாது தள்ளாடுகின்றது.

ஆகவே உலகம் விரைவில் ஓர் முடிவுக்கு வந்து உங்களிடமும், எங்களிடமும் என்னதான் முடிவு கேட்கப்போகிறது.

இன்று தேர்தல் முடிவின்மூலம் எமது கோரிக்கைகளை முன்வைத்து இராணுவ பலத்துடனும், அரசியற் பலத்துடனும் உலகத்தின் வரலாற்றில் சிறந்து நிற்கின்றோம்.

உலக ஆய்வாளர்கள் எமது போராட்டத்தினை ஆய்வுசெய்ய முடியாது என ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள்.

1990 ஆம் ஆண்டுக்குப்பின் இந்த மண்ணில் விசித்திரமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. விடுதலை இலக்கில் அபாயம் ஏற்பட கூடியநிலை தற்பொது இருக்கிறது. அதாவது கலைவடிவம் வெறும் கருத்து வடிவமாக மாறும் அபாயம். எல்லை கடந்து போனால் வெறும் பரப்புரையாக மாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த அபாயத்தினை தாங்கும் அறிஞர்கள் உள்ளார்கள். இவர்கள் இதற்கு முன்வரவேண்டும் என மேலும் கருத்து தெரிவித்தார்.

## இளம் விதவைகளுக்கு மீளளிப்புக் கடன்

(கரைச்சி)

கணவனை இழந்த இளம் விதைவைகளுக்கு சுயதொழிலை மேற்கொள்வதற்கு மீளளிப்புக்கடன் கரைச்சிப் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படவுள்ளது.

கணவனை இழந்த 25 இளம் விதைவைகளுக்கு சுயதொழில் மேற்கொள்ளும் வகையில் தலா 4500 ரூபா வீதம் மீளளிப்புக் கடனாக வழ்ங்கப்பட்டது.

(17)

## யாழ்.பல்கலைக்கழகத்திற்கு நோர்வே உதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையை மேம்படுத்துவதற்கு நோர்வேயிலுள்ள ஒஸ்லோ பல்கலைக்கழகம் உதவிகளையும், வசதிகளையும் வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

இதற்கென ஒஸ்லோ பல்கலைக்கழகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் மூன்று வருடங்களுக்கான ஒப்பந்தம் ஒன்றினை நாளை மறுதினம் யாழ்ப்பாணத்தில் கைச்சாத்திடவுள்ளது. (44)

## மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறி!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தால் மீன் பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியொன்று இந்த ஆண்டிலிருந்து நடத்தப்படவுள்ளதாக, அதன் இயக்குநர் பேராசிரியர் கே.சித்திரவடிவேலு தெரிவித்தார்.

கடந்த சில வருடங்களாகக் கடல்வள அபிவிருத்தி நிலையத்தால் நடத்தப்பட்டு வருகின்ற ஒரு வருட கால மீன்பிடியியல் டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்தவர்களுள் தேர்ந்தெடுக்கப்படவுள்ள குறிப்பிட்ட ஒரு தொகையினரே மேற்படி கற்கை நெறியில் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

மேலும். ஒரு வருடம் பயிற்சியளிப்பதன் மூலம் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள மீன்பிடியியல் விஞ்ஞான டிப்ளோமா கற்கை நெறியைப் பயில்வதற்கு வாய்ப்பளிக்கப்படவுள்ளது. (44)

# விடுதலைபெற்ற தொழிலாளர்களே மேதினத்தை கொண்டாடுகிறார்கள்!

## அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் தெரிவிப்பு

விடுதலை பெற்ற தொழிலாளர்கள்தான் இந்த மேதினத்தினைக் கொண்டாடுகின்றார்கள். ஆனால், நாங்கள் விடுதலைபெற்ற தொழிலாளர்கள் அல்ல. தொழிலாளர் தினத்தில் ஒன்று கூடி இருக்கின்றோமே தவிர, தொழில் உரிமைகளைப் பெறவில்லை என அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளார் தெரிவித்தார்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நிகழ்ந்த மேதின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் -

இந்த நிகழ்வின் மூலம் ஒடுக்கப்பட்ட தொழிலாளர் இனம் அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும். அன்று சிக்காக்கோ நகரில் தொழிலாளர்கள், அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள். அந்தக் கிளர்ச்சியின் மூலம்தான் ஒரு வெற்றியைக் கண்டார்கள். எனவே இந்தத் தொழிலாளர் தினத்திற்கு ஒரு வரலாறு ஒன்று இருக்கின்றது.

குறிப்பாக, ஐரோப்பிய நாடுகளிலேயே மிகவும் மோசமாக தொழிலாளர்கள் நசுக்கப்பட்டார்கள். இதனால் அவர்கள் கிளர்ந்தெழுந்தார்கள். தமது அடிப்படை உரிமைகளைத் தட்டிக் கேட்டார்கள். போராட்டத்தின் மத்தியில்தான் மறுக்கப்பட்ட உரிமை மீண்டும் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது. அதனால்தான் தொழிலாளர் தினம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்று மனிதனை மதிப்பதற்கு பதிலாக பொருளாதாரத்தை மதித்தார்கள். மனிதனால்தான் மாண்பு அளிக்கமுடியுமே தவிர, மாண்பினால் மனிதனை அழிக்கமுடியாது.

குறிப்பாக, சிறுவர்களும் பெண்களும் அடக்கி ஒடுக்கப்பட்டார்கள். ஆண், பெண் என்ற சமத்துவம் அன்று நிலவவில்லை. இதன் காரணத்தினால் மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். ஓங்கிக் குரல் கொடுத்தார்கள். என்னைப் பொறுத்தவரையில் இன்று மனித மாண்பு மதிக்கப்படவில்லை. எமது உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றோம். சமத்துவமான நாட்டில் நாம் சமபிரஜையாக மதிக்கப்படவில்லை.

இந்த மேதினவிழா அன்று ஓர் வெற்றிவிழாவாகக் காணப்பட்டாலும் இன்று எமக்கு ஓர் வழிகாட்டல் விழாவாகத்தான் அமைந்துள்ளது. எனவே நாமும் இந்த நாட்டின் மனித மாண்புகளை பெறவேண்டும் என்றால் சமத்துவத்துடன் எமது உரிமைகளுக்குக் குரல்கொடுக்க வேண்டும் என்றால், தந்தை செல்வா குறிப்பிட்டதைப் போன்று நாம் அனைவரும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

நாம் ஒன்றுபட்டு உழைக்கவில்லை என்றால், எமது இனம் நிச்சயமாக அழிந்து போவதை யாராலும் தடுக்கமுடியாது. அண்மையில் நடந்து முடிந்த தேர்தலிலே எமது ஒற்றுமையினை சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டியுள்ளோம். இந்த ஒற்றுமை தொடரவேண்டும். மொழியால் ஒன்றுபட்ட தமிழ் இனமாகிய நாம் ஒருமித்துக் குரல் எழுப்பவேண்டும். எமது ஒற்றுமையினைக் கண்டு, ஐக்கிய நாடுகள் தலையிட்டு எமது பிரச்சினையைத் தீர்க்கவேண்டும். நிச்சயமாக எமது உரிமைகள் கிடைக்கும்.

குறிப்பாக, அண்மையில் சைப்பிரசில் ஐக்கிய நாடுகள் தலையிட்டு ஒருவாக்கெடுப்பை நடத்தியதுபோல, எமது பிரதேசத்திலும் ஓர் சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி தமிழர்கள் எவ்வாறு கடுமையாக அடக்கப்பட்டு இருக்கிறார்கள், அவர்கள் எவ்வாறு வாழ்கின்றார்கள் என்று ஒரு சர்வஜனவாக்கெடுப்பை நடத்தும் காலம் ஒன்று நெருங்கிக்கொண்டிருக்கின்றது.

தமிழர்கள் தமது உரிமைகளையும் பெற்றுவாழ, எல்லாம்வல்ல இறைவனின் அருள் ஆசியை வேண்டி நிற்கிறார்கள் என, அருட்தந்தை மேலும் கருத்து தெரிவித்தார்.



அல்வாய் அம்பாள் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் ஆசிரியர் மு.ச.அரியகுலதேவன் உரையாற்றுவதையும் அதிபர் எஸ்.ஏ.தேவச்சந்திரன் இளைப்பாறிய அதிபர் எஸ்.சந்திரசேகரம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (17)

# இந்திய கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர்!

இந்திய கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் இம்மாத இறுதியில், யாழ்மாவட்ட கடற்தொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

இதற்கான முன்னேற்றபாடாக யாழ்.மாவட்ட மீனவர் சங்கப்பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று, நாளை மறுதினம் காலை 11 மணியளவில் யாழ் மாவட்ட சமாச மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த புவியியற்துறை விரிவுரையாளர்கள், யாழ்.கடல்நீரியற்துறை கல்லூரி அதிபர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் இந்திய மீனவர்களின் வருகை இழுவை மீன்பிடிப்படகுகளின் மீன்பிடி என்பன தொடர்பாகவும், விரிவாக ஆராயப்பட்டு, தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளன.

இந்தக் கலந்துரையாடல் இம்மாத இறுதியில் இலங்கைக்கு வருகைதரவுள்ள இந்திய கடற்தொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுடன் கலந்துரையாட ஏதுவாக அமையும் என, எதிர்பார்க்கப்படுகின்றது. இந்திய கடற்தொழில் சங்கப்பிரதிநிதிகள் எதிர்வரும் 22 ஆம் திகதி மன்னார் வருகைதரவுள்ளனர். இவர்கள் மன்னார் கடற்தொழிலாளர் மீனவசங்க சமாச பிரதிநிதிகளைச் சந்தித்துவிட்டு, ஓரிரு தினங்களின் பின்னர் குடாநாட்டுக்கு வருகைதந்து, இங்குள்ள கடற்தொழிலாளர் சங்க சமாச பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




மேலைப்புலோலி சதாவதானி நா.கதிரவேற்பிள்ளையன் 97 ஆவது ஆண்டு நினைவுவிழாவில் சிவஸ்ரீ வேதாரிணிய குருக்கள் ஆசியுரை வழங்குவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் திருமதி எஸ்.சிவஞானசுந்தரம் மற்றும் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி எஸ்.புஸ்பலிங்கம், விழாதலைவர் எஸ்.தர்மலிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (17)




# மொபைல் போன்களில் பஞ்சாங்கம்

மொபைல் போன்களின் பாவனை மேலைத்தேய நாடுகளில் தான் கூடுதலாக இருந்தது. ஆனால், அண்மையில் எடுக்கப்பட்ட தரவுகளின் படி ஆசிய நாடுகளில் இவற்றின் பாவனை அசாதாரணமாக அதிகரித்திருந்தது. அதிலும் இந்தியா, சீனா, மலேசியா மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளில்தான் அதிகமாகப் பாவிக்கப்படுகின்றது. அதற்குக் காரணம் மொபைல் போன்களில் வந்திருக்கின்ற தொழில் நுட்ப முன்னேற்றம் எனத் தொழில்நுட்பவியலாளர்கள் கருதுகிறார்கள். அதற்கு இன்னொரு காரணமும் கொடுக்கப்படுகின்றது. என்னவென்றால் நாங்கள் பயன்படுத்துகின்ற பஞ்சாங்கங்கூட கையடக்கத் தொலைபேசியில் வந்திருக்கின்றது என்பதுதான். இதன் காரணமாக சமய ஸ்தாபனங்களில் கையடக்கத் தொலைபேசிகளின் பாவனை அதிகரித்திருக்கின்றது. சீனாவில் மட்டும் மில்லியன் கணக்கான மொபைல் போன்கள் பாவனையில் உள்ளன. அத்துடன், மற்றைய வீட்டுத் தொலைபேசிகளும் உள்ளன. பெரும்பாலும் வருகின்ற 5 வருடங்களுக்குள் ஆசிய நாட்டில் கையடக்க தொலைபேசிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகக் கருதப்படுகின்றது.



# குட்டிக் கார்



முன்னொரு காலத்தில் படகுக்கார்களில் பவனிவருவதனை மக்கள் விரும்பினார்கள். ஆனால், தற்போது சிறிய அதிலும் மிகச் சிறிய கார்களில் பயணம் செய்வதனை விரும்புகிறார்கள். அதற்கு அவர்கள் கூறும் காரணங்கள் - இலகுவாகச் செலுத்தக்கூடியதாக இருத்தால், விபத்துக்களிலிருந்து தப்புதல், நிறுத்துவதற்குப் பெரிய இடம் தேவைப்படாதிருத்தல் என்பனதான். தற்போது அமெரிக்காவில் ஓடுகின்ற ஒரு சிறிய கார் எல்லோரையும் கவர்ந்திருக்கின்றது. தற்போது பரீட்சார்த்தமாகச் சந்தைக்கு விடப்பட்டிருக்கும் இந்தவகையான கார்கள், 2006 ஆம் ஆண்டளவில் சந்தையில் அதிகளவு விற்பனையாகும் எனக் கருதப்படுகின்றது. இது 1998 ஆம் ஆண்டிலிருந்து பல தரப்பட்ட வடிவங்களில் வெளிவந்தது. ஆனாலும், தற்போது தான் முற்றுமுழுதாக ஒரு சிறந்த வடிவத்தினைப் பெற்றிருக்கின்றது. இந்தக் காரினைத் தயாரித்த நிறுவனம் மேர்சிடஷ் பென்ஸ். இதனை வடிவமைத்தவர் பிராங்க் லொயிட் நைட்.

இதனைத் தொடர்ந்து பி.எம்.டபிள்யூ நிறுவனமும் இப்படியான சிறியவகை கார்களைத் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றது. இந்தவகை வாகனங்கள் குறைந்த பெற்றோலில் கூடியளவு தூரம் ஓடக்கூடியதாகவும் இருப்பதால், சந்தையில் இவற்றுக்கு நல்லகிராக்கி இருக்கின்றது.



# தந்தையற்ற எலிகள்



கருக்கட்டல் நிகழ்த்தப்படுவதற்கு ஆண் கருவின் குரோமோசோமும் பெண் முட்டையின் குரோமோசோமும் இணைவது வழமையான நிகழ்வாகும். தற்போது இரு பெண் எலிகளில் இருந்து பெறப்பட்ட 2 சோடி குரோமோசோம்களை இணைத்து 2 பெண் எலிகளை உருவாக்கியுள்ளனர். இம்முறையில் கருக்கட்டல் நிகழ்வதைப் பார்தினோஜினிசிஷ் (**PARTHENOGENESIS**) என அழைக்கப்படுகின்றது. இவை இயற்கையாக மிருகங்களிடையே நடைபெறுவதில்லை.

பூச்சி இனங்களில் இவ்வாறான இனப்பெருக்க முறை காணப்படுகின்றது. கோழிக் குஞ்சுகளையும் இவ்வாறான முறையில் உருவாக்கமுடியும். மிருகங்களிலும் இவ்வாறான இனப்பெருக்கமுறையைப் பாவிக்க முடியுமென ஜப்பானின் விவசாய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானியான டொக்ரர் கோனோ தெரிவித்துள்ளார். முதிர்ச்சி அடையாத எலியின் மரபணுக்களை முதிர்ச்சி அடைந்த எலியின் மரபணுக்களுடன் இணைத்து கருவினை உருவாக்கியுள்ளனர்.

மனிதர்களிடையே இவ்வாறான செயற்பாடுகள் சாத்தியமில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பற்களுக்கு எக்ஸ்ரே எதிரி

மகப்பேற்றுக் காலத்தில் பற்களுக்கான எக்ஸ்ரே கதிர் பரிசோதனைகள் மேற்கொள்வதால் நிறைகுறைந்த குழந்தைகள் உருவாவதற்குக் காரணமாக அமைவதாக விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

எக்ஸ் கதிர் பரிசோதனைகளால் சிசுக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை முன்னர் விஞ்ஞானிகள் அறிந்திருந்தனர். ஆனால், பற்களுக்கான எக்ஸ் கதிர் பரிசோதனைகள் சிசுககளின் நிறை குறைவுக்குக் காரணம் எனத் தற்போது தெரிவித்துள்ளனர். சிசு ஒன்று பிறக்கும்போது ஐந்து இறாத தல் எட்டு அவுன்சுக்கு குறையாமல் இருத்தல்வேண்டும். 1993 ஆம் ஆண்டுக்கும் 2000 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் எக்ஸ் கதிர் பரிசோதனைகளை மேற்கொண்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகள் மத்தியில் இந்த ஆய்வினை மேற்கொண்டிருந்தனர். இதேவேளை, எக்ஸ்ரே கதிர் நரம்பு மண்டலத் தொகுதியில் எவ்வாறான மாற்றங்களை உருவாக்குகின்றன என்பதையும் ஆராய்ந்து வருகின்றனர். இதேவேளை ஜப்பானின் ஹிரோசிமா நகரில் அணுகுண்டு கதிர்வீச்சின் பின்னர் பிள்ளைகள் குறைவான நிறைகொண்டவர்களாகப் பிறந்திருந்ததாகவும் பேராசிரியர் கெயித்கோல் தெரிவித்திருந்தார்.



# புதிய மாற்று பெரிய தொலைநோக்கி





உலகில் மிகப் பெரிய தொலைநோக்கிக் கருவி அரிசோனா மானிலத்தில் பொருத்தப்பட்டுள்ளது. இரு கண்களாலும் ஒரே நேரத்தில் பார்க்க கூடிய பைனாக்குலர் (**BINOCULAR**) வகையைச் சார்ந்தது. இதன் மூலம் இரு தொலைநோக்கிக் கருவிகள் ஒன்றிணைக்கப்படவுள்ளன. ஒவ்வொரு வில்லையும் (**LENSE**) 8.4 மீற்றர் விட்டம் கொண்டனவாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தத் தொலைநோக்கிக் கருவி பொருத்தப்பட்டதும் வேற்றுக் கிரகங்களையும் தெளிவாக அவதானிக்கமுடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது 1996 இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. அடுத்த ஆண்டில் பொருத்தி முடிக்கப்படும். தொலை நோக்கியின் ஒவ்வொருவில்லைகளிடமிருந்தும் கிடைக்கும் விம்பங்கள் ஒன்றிணைக்கப்படுவதால் மிகவும் தெளிவான விம்பம் ஒன்றைப் பெறக்கூடியதாக அமைந்துள்ளது.

விண்வெளி ஆய்வில் புதியபரிமாணத்தை தோற்றுவிக்கவுள்ளதாக இதை உருவாக்கிய அமைப்பின் தலைவர் பீற்றர் ஸ்ரிட்மற்றர் தெரிவித்துள்ளார்.

# எரிகல்





**2000** ஆம் ஆண்டில் பூமியில் விழுந்த எரிகலின்மூலம் சந்திரன் கனி வளத்தினைக் கொண்டுள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்தக் கனிவளத்திற்கு கப்கெயிற் (**HAPKEITE**) எனப் பெயரிட்டுள்ளனர். 'கப்கி' என்ற விஞ்ஞானியே இந்தக் கனப்பொருளைக் கண்டுபிடித்தார். இந்தச் கனப்பொருளில் - இரும்பு, சிலிக்கன் ஆகிய மூலகங்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர். காற்று இல்லாத சந்திரனில், புமியில் காணமுடியாத கனப்பொருட்கள் இருப்பதாகவும்,

சந்திரனில் விழுந்த எரிகற்கள் அதன் மேற்பரப்பில் மாற்றங்களை உருவாக்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர். மணித்தியாலத்திற்கு 1 இலட்சம கிலோ மீற்றர் வேகத்தில் சந்திரனின் மேற்பரப்பை இந்த எரிகற்கள் மோதியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

மேற்பரப்பில் விழுந்த வேகத்தில் உருகி, இரசாயன மாற்றங்களை உருவாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## திரை விமர்சனம்

# வானம் வசப்படும்



மீரா, குருதிப்புனல் ஆகிய படங்களை இயக்கிய பிரபல ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராம் இயக்கியுள்ள படம் இது. மல்டிடைமன்ஷன் கமெராவில் முதல் முறையாக இந்தப் படத்தை எடுத்துள்ளார்கள்.

பெரும் தொழிலதிபர் விஜயகுமாரின் செல்லமகள் பூங்கோதை குழந்தைத்தனமானவள். பூங்கோதைக்கும், ரேவதி + நாஸர் மகனாகிய வக்கீல் கார்த்திக்குக்கும் காதல் மலர்கின்றது. நிதிமோசடி ஒன்றில் நிரபராதியாகிய விஜயகுமார் சிறைக்கு அனுப்பப்பட, பூங்கோதை நிராதரவாகின்றாள். பின்பு கார்த்திக் தனது பெற்றோருடைய சம்மதத்துடன் அவளைத் திருமணம் செய்து கொள்கின்றான். திருமணத்தன்று இரவு புதுமணத்தம்பதிகள் காரில் வெளியே செல்கின்றார்கள். வீடு திரும்பும்போது கார் பழுதடைந்துவிடுகின்றது. இரவு அவர்கள் பஸ்ஸில் வீடு திரும்பிவரும்போது சனக கூட்டம் காரணமாகப் பூங்கோதை நடு இரவில் தவறுதலாக வேறு ஒரு பஸ் நிலை யத்தில் இறங்கிவிடுகின்றார். அங்கே இரண்டு வெறியன்கள் அவரைக் கெடுத்துவிடுகின்றார்கள். இதன்பிறகு என்ன நடைபெறுகிறது என்பதுதான் மீதிக்கதை.

கார்த்திக், பூங்கோதை காதல் காட்சி அற்புதமாகப் படம்பிடிக்கப்பட்டிருக்கின்றது. அதேபோல் அந்தப் அந்தப்பேதைப் பெண் கெடுக்கப்படும் காட்சியில் இயக்குநர் எம்முடைய மனத்தில் நிற்கின்றார்.

ஆனால், படம் தொலைக்காட்சித் தொடர் போன்று இறப்பர்த்தனமாக இழுபட்டுக் கொண்டு செல்கின்றது. பூங்கோதை, சந்திரநாதன் மற்றும் கார்த்திக்குமார் - புதுமுகங்கள். நாஸர் , ரேவதி நன்றாகத் தங்களுடைய பங்கினைச் செய்திருக்கின்றார்கள். நாக்கில் நரம்பில்லாமல் பேசும் வக்கீலாகத் தலைவாசல் விஜய் மற்றும் கேவலமான கதா பாத்திரத்தில் ஓ.எம்.சி.ஹனீபா, விபச்சாரியாக கோவை சரளா எனப்பலர் வருகின் றார்கள்.

சுஜாதாவின் கதைக்கு லாரா வசனம் எழுதியிருக்கின்றார். மகேஷுடைய இசையில் 'கண்கள் தீண்டி' என்ற பாடல் மனத்தில் நிற்கின்றது. ஒளிப்பதிவில் எடுத்த கவனம் திரைக்கதையில் இல்லை. வானம் மனம் வசப்படவில்லை.

- PNS -

# ஓர்காஷ் திமிங்கலங்கள்



அமெரிக்காவின் மேற்கு கடற்பிரதேசத்தில் வாழும் ஓர்காஷ் எனப்படும் திமிங்கலங்கள், தமது சமிஞ்ஞை ஒலியின் உரப்பினை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இக்கடல் பிரதேசத்தில் படகுகளினதும் வள்ளங்களினதும் போக்குவரத்து அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளன. இதனால் அதிகளவு இரைச்சல்கள் காணப்படுகின்றன. திமிங்கலங்கள் குழுவாகச் சென்று இரை தேடும் பழக்கமுடையவை. சமிஞ்ஞை ஒலியை அதிகரிப்பதன்மூலம், தமது இனத்தின் இருப்பிடங்களை அறிந்துகொள்கின்றன. பிரித்தானிய, அமெரிக்க ஆய்வாளர்கள் விஞ்ஞான சஞ்சிகை ஒன்றில் இந்த உண்மையைத் தெரிவித்துள்ளனர். படகுகளும் கப்பல்களும் தமது இருப்பிடங்களுகக்கு அருகில் வரும்போது சமிஞ்ஞை ஒலியினை அதிகரிக்கின்றன. இதனால் இரைச்சலைவிட அதிக ஒலியின் சமிஞ்ஞைகளை வெளிப்படுத்துகின்றன. கடல் போக்குவரத்தின் அதிகரிப்பினால் இந்த இன திமிங்கலங்கள் அருகி வருவதாகவும் தெரிவித்துள்ளனர். இத்திமிங்கல வகைகளை அவதானிக்கும் இடங்களில் உல்லாசப் பிரயாணிகள் தமது இயந்திரங்களை நிறுத்தி விடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# முதிர்ச்சியடையாத கலங்கள்

ஸ்டெம் செல் (STEM CELL) எனப்படுபவை முதிர்ச்சி அடையாத கலங்களாகும். இவற்றை நமது தேவைக்கேற்ற கலங்களாக மாற்றியமைத்து கொள்ளலாம். பாதிக்கப்பட்ட இதயத்தின் கலங்களை மாற்றீடு செய்வதற்கு இவ்வகையான ஸ்டெம் செல்களைப் பாவித்துள்ளனர்.



இவற்றின்மூலம் இதய சத்திரசிகிச்சை தவிர்க்க முடிந்துள்ளது. அமெரிக்க ஆய்வாளர்கள் இந்த வகையான சிகிச்சை முறையினை உருவாக்கியுள்ளனர்.

இதய சத்திரசிகிச்சை தேவைப்பட்ட 20 நோயாளிகளை இந்த முறைமூலம் பரிசோதித்துள்ளனர். இந்த நோயாளிகள் இதயத்தினால் இரத்தத்தை உடற்பாகங்களுக்குக் கொணடுசெல்ல முடியாதிருந்தது. முதலில் நோயாளிகள் இடது இருதய அறையின்மூலம் எவ்வளவு இரத்தத்தை வெளியேற்ற முடிகின்றது என்பதனை அவதானித்தனர். சாதாரண மனிதர்கள் 55 வீதமான இரத்தத்தை இடது இதய அறையின் மூலம் வெளியேற்ற வேண்டும். ஆனால் இதயம் பாதிக்கப்பட்டவர்களினால் 35 வீதமான இரத்தத்தையே வெளியேற்ற முடிந்தது. எல்லா நோயாளிகளுக்கும் இரத்தம் செல்லும் பாதையின் திசை மாற்றும் முறையினை (By - Pass) மேற்கொண்டிருந்தனர்.

இதேவேளையில், தேர்ந்தெடுக்கப்பட்ட சில நோயாளிகளுக்கு அவர்களது இடுப்பு எலும்பில் (HIP BONE) எடுக்கப்பட்ட 'ஸ்டெம் செல்' எனப்படும் கலங்களை இதயத்தின் 25 முதல் 30 மாறுபட்ட இடங்களில் செலுத்தினர். 6 மாதங்களின் பின் இவ்வகையான கலங்கள் செலுத்தப்பட்டவர்கள் 46.1 வீத இரத்தத்தை வெளியேற்றக்கூடியதாக இருந்ததை அவதானித்தனர். கலங்கள் செலுத்தப்படாதவர்களில் 37.2 வீத இரத்தத்தையே வெளியேற்றக் கூடியதாக அமைந்தது.

# மருந்தாகும் பசளிக்கீரை



ஸ்பினாச் (SPINACH) எனப்படும் பச்சை நிறமுடைய இலைக் கறிவகை - கண்பார்வை இழப்பை தவிர்ப்பதற்கு உதவுவதாக தெரிவிக்கப்படுகிறது. பச்சைத் தாவரங்கள் சூரிய ஒளியை உறிஞ்சிக் கொள்வதற்காக நிறத்தை உருவாக்கும் பொருட்கள் (PIGMENTS) பாவிக்கப்படுகின்றன. இலைகளிலிருந்து இப்பொருளைப் பிரித்தெடுத்து, கண்ணின் நரம்புக்கலங்களில் பாவிப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.

இதன்மூலம் ஒளி கண்ணில் பட்டதும் செயல்பட ஆரம்பிக்கின்றன. நிறங்களையும் பிரித்து அறிந்து கொளளமுடியாத மக்களுக்கு இந்த முறையான சிகிச்சை உதவலாமென தெரிவிக்கப்படுகிறது. கண்ணின் நரம்புக்கலங்களுக்குப் பின்னால் தண்டுகளும், கூம்புகளுமான (ROD AND CONES) வடிவில் அமைந்த பகுதியே நிறங்களைப் பிரித்தறிவதற்கு உதவுகின்றன.

தாவரங்கள் ஒளிச்சேர்க்கையின்போது சிறிய அளவிலான மின்சாரத் துடிப்பினை உருவாக்குகின்றன. ஸ்பினாச் இலையிலிருந்து நிறத்தை உணரக்கூடிய புரதவகையை பிரித்தெடுத்து, கண்களில் ஒளியை மின்னாக மாற்றும் பிரதேசத்தில் பொருத்தவுள்ளனர்.

இவற்றை மனிதர்களின் கண்களில் பொறுத்தும்போது வேற்றுப் பொருட்களை மனித உடல் எதிர்க்கும் தன்மைகளையும் ஆராய்ந்துவருகின்றனர்.

# ஹெரவினரலி அலைகள்

இன்று பல வகையான அலைக் கதிர்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. ரேடியோ அலைகள் நுண் அலைகள், எக்ஸ்ரே கதிர்கள், சிவப்பு ஒளியில் காணப்படும் இன்பரா ரெட் (INFRA RED) எனப்படும் கதிர்கள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையான அலைகளை ஒன்றிணைத்து மின் காந்த அலைத்தொகுதி (ELECTRO MAGNETIC) என அழைக்கப்படுகின்றது. இன்று மருத்துவத்தில் உடலின் உட்பாகத்தில் தோன்றும் கட்டிகளைச் சத்திரசிகிச்சையின்றி நீக்குவதற்கு இவ்வலைகள் உதவி புரிகின்றன.



மேலும் கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ளும் விடியோ கமராக்கள் இவ்வகையான அலைகள்மூலம் ஆடைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆபத்தை விளைவிக்கும் ஆயுதங்களைக் கண்டுபிடிக்க உதவுகின்றன.

300 ஆண்டுகளுக்கு முன்னர் ஐசாக் நியூட்டன் என்ற விஞ்ஞானியின் கண்டுபிடிப்பான மின்காந்த அலையின் செயற்பாடுகள் பல்வேறு வடிவத்தில் உதவிபுரியவுள்ளன.

# துப்பறியும் ராடர்



செவ்வாய்க்கிரகத்தை வலம்வரும் ஐரோப்பிய விண்கலத்தில் 40 மீற்றர் நீளமான தெறிப்பு அலைகளை உணரக்கூடிய கருவி (RADAR) பொருத்தப்பட்டுள்ளது. இந்தக்கருவி செவ்வாய்க் கிரகத்தின் நிலமட்டத்திலிருந்து 3 மைல்கள் வரையான ஆழத்தில் நீர் இருப்பதற்கான சாத்தியங்களை ஆராய வல்லது. இந்தக் கருவி புரந்தளவிலான செவ்வாயின் நிலப்பரப்பை ஆராய்வதற்கேற்றவாறு, எந்தத் திசையிலும் திரும்பக்கூடியவாறு பொருத்தப்பட்டுள்ளது. ஆனால், இந்தக்கருவியை, வடிவமைத்தவர் திட்டமிருந்தாலும், கூடிய அசைவுகளைக் கொண்டிருப்பதாகக் கண்டுபிடித்துள்ளார். இவ்வாறான அசைவினால்,செவ்வாய்க்கலத்தின் வெளிப்புறத்துடன் மோதிக்கொள்ளும் சாத்தியம் இருப்பதாகவும், கண்டுகொண்டுள்ளனர். இதனால், ராடர் கருவியின் செயற்பாடுகளைச் சிறிது காலம் தாமதிப்பதற்குத் திட்டமிட்டுள்ளனர். ராடர் கருவி மிகவும் பாரம்குறைந்த பொருட்களினால் உருவாக்கப்பட்டிருப்பதால், பக்கங்களுக்குத் திரும்பும்போது, மோதிக்கொள்வதால் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளப்போவதில்லை.

செவ்வாயில் தரைக்குக் கீழ் நீர் உள்ளதா என்பதைக் கண்டு பிடிப்பதற்காகவே ராடர் கருவி உருவாக்கப்பட்டிருந்தது.

இந்தக் கருவியில் இருந்து வெளிப்படும் அலைகள் செவ்வாய் க்ரகத்தன் நிலமட்டத்தின் கீழ் திண்ம உருவலோ அல்லது திரவ உருவலோ நர் இருந்தாலும் தெறிப்பு அலைகள்மூலம் இனங்காணும் சக்திவாயந்தவை. அத்துடன், மேற்பரப்பின் சூழலையும் ஆராயும் வல்லமை கொண்டது.

நேர்காணல்: தேவி ~ பரமலிங்கம்

# பாரம்பரிய கலைகள் இளந்தலைமுறைக்கு எடுத்துச் செல்லப்படவேண்டியுள்ளது

நாட்டுக்கூத்து நட்டுவாங்கம் முதலிய கலைகளிலே சிறந்து விளங்கிய அண்ணாவியார் அ.மனோகரனுடனான நேர்காணல்

அண்ணாவியார் அ.மனோகரன் இளவாலை - போயிட்டி சீந்திப் பந்தல் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். யாழ்.குருநகரைத் வாழ்விடமாக கொண்டவர். நீண்ட



காலம் அங்கேயே வாழ்ந்தவர்.

இடம்பெயர்வு காரணமாக தற்சமயம் குருநகரை வாழ்விடமாகக் கொண்டாலும் இளவாலையுடனான 'தொப்புள் கொடி' உறவு விட்டுப் போகாமல் இங்கேயும், அங்கேயுமாக வாழ்ந்து வருகின்றார்.

நாட்டுக் கூத்துகளில் நடித்தது மட்டுமல்லாமல் பல நாட்டுக் கூத்துகளுக்கு நட்டு வாங்கமும் செய்துள்ளார். அத்தோடு, பசான், வசாப்பு போன்ற கிறிஸ்தவ மதசார்பான பாடல்கள், புலம்பல்கள் என்பனவற்றை அழிந்து போகாமல் சிறார்கள் மத்தியில் வளர்த்து வரும் மகத்தான சேவையை ஆற்றி வருகிறார்.

அவரை நமது ஈழநாடு பத்திரிகைக்காக செவ்வி காணச் சென்ற போது இன்முகத்துடன் வரவேற்று கேள்விகளுக்கான பதில்களைத் தந்தார். அவற்றை உங்களுடன் பகர்ந்து கொள்கின்றோம்.

**கேள்வி:** நீங்கள் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டதற்கான காரணம் யாது?

**பதில்:** எனது பெற்றோரும் அவரது சகோதரர்களும் பரம்பரையாக கலைவழி வந்தவாகள். இளைபபாறிய ஆசிரியரான சூசைமுத்து அந்தோனிப்பிள்ளை (திரவியம்) இப்பொழுது கனடாவில் வாழ்ந்து வருகிறார். தாயாரின் சகோதரரான அவர் வடஈழத்தில் கூத்துகளைத் திரட்டி வெளியிட்டுள்ளார். அடுத்தது எனது தந்தையாரின் இளைய சகோதரரான அண்ணாவி ராசாத் தம்பி என்பவர் இவர்கள் தந்த உற்சாகந்தான் நான் கலைத்துறையில் நுழையக் காரணமாயிற்று.

**கேள்வி:** உங்கள் மூதாதையர் எவரும் இத்துறையில் ஈடுபட்ட தான செய்திகள்...?

**பதில்:** எனது பேரனார் தொமிங்கு என்பவர். காலத்திலேயே எமது குடும்பம் நாட்டுக் கூத்துக் குடும்பமாகவே வாழ்ந்து வருகிறது. அவருக்கு பிற்பாடு எனது தகப்பனார், சகோதரர்கள் இப்பொழுது நான் எனது சகோதரர்கள் என நீண்டு கொண்டே வருகிறது. இதனால் இளவாலை போயிட்டி சீந்திப் பந்தல் கிராம மக்களே "தொமிங்கும், மக்களும், பேரப்பிள்ளைகளும் பாடுவாங்கள்" என்ற புகழ் நின்று நீடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி:** நீங்கள் இத்துறையில் ஊன்றிக் கால் பதிக்க உதவியவர்கள்...?

**பதில்:** தகப்பனாருக்கு எட்டு சகோதரர்கள் நால்வர் பெண்கள், நால்வர் ஆண்கள் இவர்கள் அனைவருமே கலையில் களம் கண்டவர்கள். அதிலும் நாட்டுக் கூத்தென்றால் எனது கடைசிச் சித்தப்பா அண்ணாவியார் ராசாத்தம்பி என்றால் நாடே அறியும் அவர்தான் என்னை இத்துறையில் ஊன்றிக் கால் பதிக்கக் காரணமானவர்.

**கேள்வி:** இதுவரை எத்தனை நாட்டுக் கூத்துக்களில் நடித்துள்ளீர்கள். நட்டுவாங்கம் செய்துள்ளீர்கள்?

**பதில்:** சுமார் இருபதுக்கும் மேற்பட்ட நாடகங்களில் நூற்றுக்கும் அதிகமான மேடைகளில் தோன்றியுள்ளேன். குறிப்பாக "அரிச்சந்திரன்", "கற்பலங்காரன்", "சிலை எடுத்த சேரன்", "நொண்டி", "எஸ்தாக்கி", "கண்டியரசன்", "தேவ சகாயம்", "நந்திவர்மன்" இவ்வாறு பட்டியல் நீளும். இவற்றில் பத்துக்கும் மேற்பட்ட நாட்டுக் கூத்துகளுக்கு நட்டுவாங்கம் செய்துள்ளேன்.

அவற்றில் வேம்படி மகளிர் கல்லூரி, அச்செழு பாடசாலை, பொஸ்கோ, யாழ்.பல்கலைக்கழகம், உத்தரிய மாதா ஆலயம், திருமறைக் கலாமன்றம் ஆகியவற்றுக்காக பழக்கிய நாடகங்களைக் குறிபபிடலாம்.

**கேள்வி:** இவைதவிர வேறு துறைகளில் ஈடுபாடு...?

**பதில்:** குருநகர், இளவாலை, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, செம்பியன்பற்று, குடாரப்பு, தாளையடி போன்ற பகுதிகளில் பசான், ஒப்பாரி, புலம்பல், ஆகிய பாடல் ராகஙகளை பாடசாலை சிறார்களுக்கு பங்குத் தந்தையரின் பணிப்புக்கு இணங்கி பழக்கியும், போட்டிகளுக்கு நடுவராக இருந்தும் பணி ஆற்றியுள்ளேன். மேலும் யாழ். திருவுளப் பணியாளர் சபையினரின் அனுசரணையுடன் பசான் ஒலி நாடாவை வெளியிட்டுள்ளேன். யாழ். நல்லூர் பிரதேசங்களில் கண்ணன் முரளி இசையுடன் ஒலிபெருக்கியில் பாடியும் வந்துள்ளேன்.

**கேள்வி:** உங்கள் பங்களிப்புக்குக் கிடைத்த பாராட்டுக்கள் பற்றி?

**பதில்:** 2002 ஆம் ஆண்டு யாழ். பிரதேச கலாசாரப் பேரவையாலும், மற்றும் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம், கிறிஸ்தவ குருக்கள், யாழ். திருமறைக் கலாமன்றம், குருநகர், கலைக்கழகம், யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம் போன்றவற்றால் பரிசளித்து, பட்டமளித்து, சான்றிதழ்கள் பெற்றுள்ளேன்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்



டுக் கழகத்தினால் முடிசூட்டி, பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது. குறிப்பிடத்தக்கது.

கேள்வி: நீங்கள் இனி சாதிக்க வேண்டுமென ஏதாவது நினைத்துள்ளீர்களா?



**பதில்:** தமிழில் பழமை வாய்ந்த மரபுக் கூத்துக்களையும், நாடகங்களையும் இளைய தலைமுறையினருக்கு இலகு படுத்தி விளங்கப் படுத்தியும், நெறிப்படுத்தியும் வழங்குவதனால் மீண்டும் ஒரு நாட்டுக் கூத்து சகாப்தத்தை உருவாக்க முயலுகின்றோம். இதன் மூலமாக கூத்துக்கள் அழியாமல் இருக்க அத்தகைய நாடக, நாட்டுக் கூத்து நூல்களைப் பதிப்பித்து உலாவ விட வேண்டுமென்பதே எனது எதிர்கால கனவு நினைவுகளெல்லாம்.

**கேள்வி:** எதிர்கால சந்ததியினருக்கு நீங்கள் தெரிவிக்க விரும்புவது?

**பதில்:** நடந்து கொண்டிருக்கும் எங்கள் உரிமைப் போருக்கான யுத்தங்களால் விளைந்த கதைகள் எவ்வளவோ இருக்கின்றன. அவற்றையெல்லாம் சரித்திரங்களாக்கி நாடக, நாட்டுக் கூத்து வடிவங்களில் வழங்குவதுடன் அந்தந்தத் துறைகளில் தலை நிமிர்ந்து நிற்க வேண்டுமென்றும் யாசிக்கின்றேன்.

செய்திக்கட்டுரை தா. வசந்தன்

# கடல் வளக் கல்வியின் இன்றைய தேவை

இலங்கையானது 66ஆயிரம் சதுரகிலோ மீற்றர் பரப்புள்ள நிலப் பரப்பினைக் கொண்டுள்ள அதே வேளை, 2,33000 சதுரகிலோ மீற்றர் பரப்புள்ள சமுத்திரப் பரப்பினையுடையது. அதில் 26 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பரப்புடைய கண்டமேடையையும் கொண்டுள்ளதுடன், 1700 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையையும், 1200 கிலோ மீற்றர் நீளமான பல்லுருவக் கடற்கரையையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ்வாறான இலவச வளங்களைக் கொண்டுள்ள இலங்கையில், வடபகுதியே. பிரதானமாக விளங்குகின்றது. ஆனால், இன்றைய காலகட்டத்தில் கடந்த காலங்களைவிட வடபகுதியில் கடல் வளம்சார் உற்பத்தி நடவடிக்கைக்குரிய கட்டுப்பாடுகள் ஓரளவு தளர்த்தப்பட்டிருந்தும், வடபகுதி கடல் வளம்சார் உற்பத்தி தென்பகுதியுடன் ஒப்பிடும்போது வீழ்ச்சிப் போக்கையே காட்டுகின்றது.

நோர்வே, சுவீடன், யப்பான் போன்ற நாடுகளில் நீரியல் வளம் நிலைத்து நிற்கின்ற அபிவிருத்தியாகக் கருதி அபிவிருத்தி செய்யப்படுவதுடன், இத்துறை ஓர் ஆராய்ச்சிக்குரிய பிரதான துறையாக மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. வெளிநாடுகளில் பல்கலைக்கழகங்களிலும் இத்துறை சார் நிறுவனங்களிலும் நீரியல் வளத்துறைக்குப் பிரதான பீடங்கள் அமைத்து பட்டக்கல்வியையும் முதுநிலைக் கல்வியையும் வழங்கிவருவதுடன், இத்துறைக்கான நிபுணர்களையும் உருவாக்கி வருகின்றது. இதனால், அந்தநாடுகளில் கடல் வளத்தின் முக்கியத்துவம் பொருளாதாரரீதியாக உணரப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் பொருளாதார ரீதியாக கடல் வளத்தை நோக்கும் போது, இது ஓர் பிரதான துறையாகும். ஆனால், இதுவரையில் இலங்கையில் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும், மூன்றாம் நிலைத் தொழிற்கல்விக்கூடங்களிலும் - பட்டக்கல்வியோ, முதுநிலைக்கல்வியோ இல்லை. அதற்குரிய முயற்சிகளும் மேற்கொள்ளப்படவும் இல்லை. ஆனால், இலங்கையில் பதவிகளைப் பெற்றுக் கொள்வதற்காக முதுநிலைக் கல்வியை இத்துறையினூடாக கற்றுப் பட்டங்களைப் பெற்றுக்கொள்ளும் துறையாகப் பயன்படுத்துகின்றார்களே தவிர, கடல் வளத்துறைசார் கல்வியை வளர்த்து, இதன் முக்கியத்துவத்தை வெளிக்கொணர முன் வருவதில்லை. காரணம் - இலங்கையில் இத்துறைசார் பிற் பாக்கான சிந்தனையும், இதனை ஓர் இழிநிலையாக எமது சமூகம் கருதுவதாலும் கடல் வளத்துறையில் ஈடுபடுவதிலிருந்து கல்வி கற்ற சமுதாயம் விலகிச்செல்கின்றது.

இதற்குரிய முதல் முயற்சியாக இலங்கையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் 1999 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கடல்வள அபிவிருத்தி நிலையத்தினூடாக மீன்பிடியியல் டிப்ளோமாக் கல்வி வழங்கப்பட்டது. இக்கற்கை நெறியானது, கற்கவரும் மாணவர்களிடமிருந்து நிதியைப் பெற்று நடாத்தப்பட்டு, அவர்கள் டிப்ளோமாதாரிகளாக வெளியேற்றப்பட்டனர். இந்த டிப்ளோமாதாரிகளைக்கொண்டு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அயராத முயற்சியால் இந்தச் சமாதான சூழலைப் பயன்படுத்தி பாடசாலை மட்டத்தில் 10 ஆம், 11 ஆம் ஆண்டு மாணவர்களுக்குக் கடல் உயிரின வளத் தொழிநுட்பம் (**Marine Bio Resources Technology**) என்னும் பாடத்தைப் புகட்ட 50 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வடபகுதியில் இப்பாடத்தின் தேவை உணரப்பட்ட பாடசாலைகளில் நியமிக்கப்பட்டு, கடந்த இரண்டு வருடங்களாகச் சேவையடிப்படையில் கற்பித்து வருகின்றார்கள். இவர்களது முயற்சியால் 1000 இற்கு மேற்பட்ட மாணவர்கள் இப்பாடநெறியைக் கற்று O/L பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். ஆனால், அந்த வினாத்தாள்களை மதிப்பீடு செய்வதற்குத் தேவையான ஆசிரியர்கள் இல்லாதநிலையில் எமது அரசு உள்ளது. இக்கடல் வளம் கற்பித்துவரும் ஆசிரியர்களை நிரந்தர நியமனமாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களாக பல்வேறு மட்டங்களால் கடும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனபோதும், இன்றுவரை எமக்கு எந்தவொரு சாதகமான பதிலும் உயர் அதிகாரிகளிடமிருந்து உறுதியாக எமக்குக் கிடைக்கவில்லை.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் நாட்டின் பொருளாதாரத்தை வளம்படுத்தாததுறைகளுக்குப் பட்டப்படிப்பிற்குரிய கல்வியை வழங்கத் தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது. அதே நேரம் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறி கடந்த நான்கு வருடங்களாக கற்கும் மாணவர்களிடமிருந்து நிதி பெற்று நடாத்தப்பட்டு வருகின்றது. அதனை ஆதாரமாகக் கொண்டு அதற்குத் தனியான பீடமொன்றை அமைத்து, பட்டப்படிப்புக் கல்வியை உருவாக்கி இத்துறையின் முக்கியத்துவத்தை வெளிக்கொணர எந்தவொரு உயர் அதிகாரிகளும் முன் வருவதுமில்லை, சாதகமான பதிலை வழங்குவதுமில்லை. மாறாக இத்துறை வேண்டாம் என்ற விவாதமும் பிற்போக்கான கண்ணோட்டத்துடன், பார்ப்பதும் வேதனைக்குரிய விடயமாகும். எனவே, கல்விமான்களும் உயர் அதிகாரிகளும் இத்துறையை வளர்ப்பதற்குப் பல்கலைக்கழக மட்டத்தில் கடல் வளத்துறைசார் பீடமொன்றை உருவாக்குவதன் ஊடாக துறைசார் மனித வளத்தைக் கட்டியெழுப்புவதுடன், எமது தேசத்தின் பொருளாதாரத்தைத் தன்னிறைவை அடையச் செய்ய முடியும்.

எது எவ்வாறு இருந்தாலும் இன்றைய உணவுத் தேவையுடன் ஒப்பிடும்போது இந்த நீரியல் வளத் துறையில் நிலைத்து நிற்கக்கூடிய வகையிலும், எம்து எதிர்காலச் சந்ததி பயனடையக்கூடிய வகையிலும் விருத்திசெய்தல் இன்றியமையாத ஒன்றாகும். எனவே, எமக்கோர் சுதந்திரம் மலரும்போது, நீரியல் வளத் துறையினூடாகவே பொருளாதாரத் தன்னிறைவை ஏற்படுத்தமுடியும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்*
*குன்ற வருப விடல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## ஒரு செய்தியும்; சில செய்திகளும்....

நேற்று முன்தினம் குடாநாட்டுப் பத்திரிகையில் வெளியான செய்திகளில் ஒன்று அனைவரின் கவனத்தை ஈர்த்த அதேவேளை - சமூகப் பொறுப்புடன் சிந்திக்கும் அனைவரதும் கவலைக்கும் காரணமாகியது.

செய்தி இதுதான்...

உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வெறும் 500 ரூபாய் பந்தயத்திற்காக வீதிவழியே பலரும் பார்த்து நிற்க நிர்வாணமாக ஓடினாராம்.

இதில் பந்தயத்தை முன்வைத்தவர்களும், பந்தயத்தை ஏற்றுக்கொண்டவரும், சுயாதீனமான - இயல்பான - மனித குணாம்சத்துடன் கூடிய நிலையில்தான் இதனைச் செய்தார்களா? என்பது ஒருபுறமிருக்க, இத்தகைய கீழ்த்தரமானதும், மனித உணர்வற்றதுமான போட்டிப் பந்தயங்களும், சவால்களும் எமது மக்களிடையே அதிகரித்து வருகின்ற போக்கானது சமூக உணர்வும், மனிதநேயமும், தேசியப் பொறுப்பும் கொண்ட மக்களிடையே பெருங்கவலையையும், பீதியையும் மட்டுமல்லாது, எதிர்கால இளம்சந்ததிகளின் கலாசார மற்றும் பண்பாட்டியல் செழுமை குறித்த சந்தேகங்களையும் ஏற்படுத்தியுள்ளது.

எந்தவொரு விடயத்திற்கும், பிரச்சினைக்கும் பந்தயம் பிடிப்பதும், சவால் விடுவதும் ஒரு இயல்பான மனிதனின் பண்பாக இருக்கமாட்டாது. அது வேடிக்கையாகவோ அலலது வெறும் பொழுதுபோக்காகவோ மேற்கொள்ளப்பட்டாலும் கூட வன்ம உணர்வுடன் இவற்றில் ஈடுபடும் எவருமே இவற்றின்போது ஏதோவொரு கட்டத்தில் தம் சுயத்தை இழந்தவர்களாகவும், மான - அவமானங்களை புறந்தள்ளியவர்களாகவும் மட்டுமல்ல தமது மனித இயல்புகளைத் தொலைத்து விட்டவர்களாகவும் தம்மை இனங்காட்டி நிற்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

தமிழினம் கலாசார - பண்பாட்டு - பாரம்பரியங்கள் அனைத்தையும் மானிடநேயம், மானிட தர்மம் மற்றும் மானிட விழுமியங்களின் அடிப்படையில் மரபுவழி பேணிப்பாதுகாத்து பெருமை கொண்ட ஒரு இனமாகும்.

ஏனைய மனித நாகரிகங்களின் மரபுசார் கலாசார பண்புகளின் தன்மையுடன் ஒப்பீடு செய்கையில் தமிழனதும் - தமிழனினதும் மனிதவியல் கலாசாரமானது - மொழியியல் பண்பானது - ஆன்மீக அறிவியலின் அடித்தளத்தில் உருவானதென்பதை அதன் 'மனிதம்' தொடர்பான ஆழமான தத்துவார்த்த சிந்தனைப் போக்கின் தனித்துவத்தில் இருந்து அறிந்துகொள்ளமுடியும்.

தமிழ் தொடர்பாகவும், தமிழர் தொடர்பாகவும் உலகம் வியந்துநோக்கும் அம்சம், தமிழ் மண்ணின் தனித்துவமான பண்பாட்டுக் கோலங்கள் யாவும் - அதன் கலாசாரப் பெருமைகள் யாவும் - மானுட மேன்மையை வலியுறுத்திநிற்கும் தன்மையின் அடிப்படையிலான சமூக உறவுக் கட்டமைப்பேயாகும்.

இன்று அந்த சமூக கலாசார கட்டமைப்பின் இறுக்கமும், வளமும், பணபாட்டுமேன்மையும் மெல்லமெல்ல சிதைவடைந்து நம்மை நாமே அவமானத்துடன் பார்த்து தலைகுனிந்து கொள்ளும் நிலைக்குத் தாழ்ந்து கொண்டு போவதை யாழ். குடாநாட்டில் அன்றாடம் நடக்கும் பல சம்பவங்கள்மூலம் உணரக்கூடியதாக உள்ளது.

அதில் ஒன்றுதான் மேற்குறிப்பிட்ட செய்தியும்.

வெளிநாடுகளில் நிர்வாணக் கோலத்தில் மக்கள் மத்தியில் ஓடுவதும், திடீரெனத் தோன்றுவதும் அடிக்கடி நடக்கும் நிகழ்வுகளேயானாலும், அதில் சம்பந்தப்படுவோரின் மனநிலைப் பிறழ்வு பற்றிய செய்தியும் அடுத்துவரும் நாட்களில் அறியக்கூடியதாக இருக்கும்.

நம் மண்ணில் மனநோயாளர்கள் கூட - அவர்கள் தம் சுயத்துவம் இழந்த நிலையில் கூட நிர்வாணமாக நடமாடுவது அல்லது தென்படுவது அபூர்வம். ஆனால், நேற்றுமுன்தினச் செய்தி - இயல்புநிலையில் உள்ள ஒருவர் வெறும் 500 ரூபாவுக்காக தன் 'மானத்தை' தாரைவார்க்கத் துணிந்ததை வெளிப்படுத்திநிற்கிறது.

இந்தப் பந்தயத்தை முன்வைத்தவர்கள், அதை ஏற்றுக்கொண்டவர் அதற்கு அனுசரணையானோர், அதனை வேடிக்கை பார்த்தவர்கள் என அனைவரும் ஏதோ ஒரு வகையான வக்கிரமான மன உணர்வுக்குள்ளானவர்கள் என்றே கருதவேண்டியுள்ளது.

இது மாதிரியான கலாசார சீரழிவுநோக்கிய சரிவு மனோநிலை எமது மக்களுக்கு ஏற்படக் காரணம் என்ன?

கலாசார சீரழிவுக்கு - போரையும், இராணுவத்தையும் மட்டுமே காரணம் கூறிக்கொண்டு பேசாமல் இருக்கமுடியாது என்கிறார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் அவர்கள்.

தமிழ் சினிமா, கட்டுப்பாடற்ற தொலைக்காட்சி சேவைகளின் ஆக்கிரமிப்பு, அந்நிய கலாசார ஊடுருவல்கள், போரின் பாற்பட்ட உளவியல் தாக்கங்கள், கல்வி வளர்ச்சியில் ஏற்பட்ட தடைகள், எல்லாவற்றிலும் மேலாக பேரினவாத அரசு 'மனதையும், அறிவையும' வெல்லும் நடவடிக்கை என்ற பெயரில மேற்கொணடுவரும் உளவியல் நடவடிக்கைகளின் பாதிப்புக்கள் என எத்தனையோ முனைகளால் தமிழினம் பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் ஒட்டுமொத்த பாதிப்பே இத்தகைய கலாசார சீரழிவு வெளிப்பாடுகளுக்கு காரணம்.

நாம் ஒட்டுமொத்தமாக இது குறித்து சிந்தித்து உரிய நடவடிக்கையை எடுக்கவேண்டிய தருணம் இதுவேயாகும்.

சிந்திப்போம்...., செயற்படுவோம்....

## நாடும் நடப்பும்




# சுகாதாரத் துறையின் சம்பள முரண்பாட்டை நீக்க குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை முடிவு!

## அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதாரத் துறையினர் மத்தியில் காணப்படும் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கும் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார, போசாக்கு நலன்புரி அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவிததார்.

அத்துடன், பல்கலைக்கழகங்களில் தாதி பாடநெறியை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சு நடாத்தி எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்தப் பாடநெறியை ஆரம்பிக்கமுடியும் என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

பொதுத் தாதிகள் ஊழியர் சங்கம் - புதிய சுகாதார அமைச்சருக்கும், பிரதமருக்கும் வரவேற்பளிக்கும் நோக்கத்துடன் ஏற்பாடுசெய்திருந்த வைபவத்தில கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த பொதுத்தேர்தலில் மக்கள் எம்மீது கொண்டிருந்த நம்பிக்கையின் அடிப்படையில் வழங்கிய ஆணையை நாம் நிறைவேற்றுவோம். இதன்படி சுகாதார சேவையின் நெருக்கடியை தீர்க்க எமது புதிய அரசாங்கம் பின்நிற்காது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்தச் சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைக்கு அதிமுக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் வேலையற்ற பட்டதாரிகளின், விவசாயிகளின், இளைஞர் - யுவதிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக நாம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றி வருகின்றோம் . இப்படி நாம் பதவியேற்ற ஒரு மாதத்துக்குள் சுகாதாரத் துறையினரின் சம்பள முரண்பாட்டைத் தீர்க்க குழு ஒன்றை நியமித்துள்ளோம்.

பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கிவிட்டு ஒதுங்கி நிறகப்போவதில்லை. இந்த நடவடிக்கையின் காரணமாக அரச துறையில் ஏற்பட்டுள்ள சம்பள முரண்பாட்டுப் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய வேலைத் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளோம். மேலும் அரச துறையினருக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்கப் பாட சாலைகளில் ஆரம்பக் கல்வி அபிவிருத்திக்கான ஐந்தாணடுத் திட்டம் ஒன்றினை மாகாணக் கல்வித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

நாட்டில் நடைபெற்ற யுத்த அனர்த்தங்களினால் கல்வி, கலாசாரம், பொருளாதாரம் என்பன வடக்கு - கிழக்குப் பிரதேசத்தில் பெரும் பின்னடைவைக் கண்டுள்ளது.

இதனால் , பாடசாலை மாணவர்களிடையே ஆரம்பக் கல்வித் தரத்தினை உயர்த்துவதனால் ஓரளவு இந்தப் பின்னடைவிலிருந்து வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் தரத்தை உயர்த்த முடியும் இதற்கான சகல நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தத் திட்டம் தொடர்ந்து 5 ஆண்டுகள் செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, பாடசாலை ஆரம்பக்கல்வி திட்டம் 2008 ஆம் ஆண்டு வரை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே, ஆரம்பக்கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தரம் 1 முதல் 5 வரையான வகுப்புக்களின் நிலவும் ஆளணி, மற்றும் பௌதீக வளத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆரம்பக்கல்விஆசிரியர், ஆங்கில ஆசிரியர் ஆரம்பக்கல்வி அதிபர் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## தமிழ் வர்த்தகர்கள் மீது பயமுறுத்தல் ஆராய எதிர்வரும் 12 ஆம் திகதி கூட்டம்

கொழும்பில் பித்தளை, செப்பு உலோகவர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் வர்த்தகர்கள் மீதான பயமுறுத்தல் நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முகமாக சிலதினங்களுக்கு முன்னர் வர்த்தக வாணிபத்துறை அமைச்சகத்தில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் ஜெயராஜ பெர்னானடோ புள்ளே கொழும்பு மாவட்ட எம்.பி மனோகணேசன் தமிழ், சிங்கள, வர்த்தக சங்கத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

உலோக வார்ப்பு தொழில் துறைக்குத் தேவையான மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் விலை தொடர்பான சிக்கல்கள் ஏற்பட்டிப்பதால் இந்த தொழில்துறையைச் சார்ந்த பெருந்தொகையான தொழிலாளர்கள் கஷ்ரத்துக்குள்ளாகியுள்ளனர். இதுதொடர்பாக இந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது. எனினும் இது தொடர்பாக இறுதிமுடிவு எடுக்கும் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூன்று அமைச்சர்களுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மூன்று அமைச்சர்களுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர்களுக்கு எதிரான இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை இந்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள நாடாளுமன்றக் கூட்டத்தொடரின் போது எதிர்க்கட்சியினால் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அமைச்சர்களான சுசில் பிரேமஜெயந்த, ரெஜினோல்ட் கூரே, மைத் திரிபால சிறிசேன ஆகியோருக்கு எதிராகவும் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்சவுக்கு எதிராகவுமே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது.

சபாநாயகர் தெரிவின்போது ஐக்கிய தேசிய முன்னணிக்கு வாக்களித்தமை தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பௌத்த பிக்குகள் இருவரை இந்த அமைச்சர்கள் அரச தொலைக்காட்சி ஒன்றில் கடுமையாக விமர்சித்திருந்தனர்.

அத்துடன், மகா சங்கத்திற்கு எதிராக விமல் வீரவன்ச வெளியிட்ட கருத்துக்கள் மற்றும் சபாநாயகரின் கௌரவத்தை மீறியமை தொடர்பாகவும் இந்த நம்பிக் கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004 ஏப்ரல்

## இரசாயனவியல் மாதிரி வினாத்தாள்

(நேற்றைய தொடர்ச்சி....)

21. $CuSO_4$ நீர்க்கரைசலுக்கு மிகை செறி HCl சேர்க்கும்போது உண்டாகும் கரைசலின் நிறத்திற்கு கிட்டவாக நிறத்தை தரக்கூடிய கரைசலை பின்வரும் செயல்களில் எது கொடுக்கும்?
1) $CrCl_3$ கரைசலுக்கு மிகைசெறி $NH_3$ கரைசல் சேர்த்தல்
2) $CuSO_4$ கரைசலுக்கு $K_4[Fe(CN)_6]$ கரைசல் சேர்த்தல்
3) $CoCl_2$ கரைசலுக்கு மிகை $NH_3$ கரைசல் சேர்த்தல்
4) $FeCl_3$ கரைசலுக்கு மிகை KCNS கரைசல் சேர்த்தல்
5) $ZnCl_2$ கரைசலுக்கு மிகை $NH_3$ கரைசல் சேர்த்தல்

22. NaOH கரைசலின் பகுதிகளை HCl கரைசல் ஒன்றினால் நியமிப்புச் செய்வதற்கு பின்வரும் நடவடிக்கைகளில் எது மிகவும் அத்தியாவசியமானது?
1) NaOH கரைசலால் அளவியை கழுவுதல்
2) HCl கரைசலால் நியமிப்பு குடுவையை கழுவுதல்
3) தகுந்த காட்டியை பயன்படுத்தல்
4) கரைசல்களின் வெப்பநிலைகளை அளத்தல்
5) NaOH கரைசலால் குழாயியை கழுவுதல்

23. $Cl_2O_3 + NaOH_{(aq)} \rightarrow$ எனும் தாக்கத்தில்
1) Cl ஒட்சியேற்றமடைகிறது 2) Cl தாழ்த்தலடைகிறது
3) Cl ஒட்சியேற்றல் தாழ்த்தல் அடைகிறது 4) Cl இன் ஒட்சியேற்ற நிலையில் மாற்றமில்லை
5) $NaOH_{(aq)}$ ஒட்சியேற்றியாகவும், தாழ்த்தியாகவும் தொழிற்படுகிறது

24. அலசன் அமிலங்களின் 10.0 $moldm^{-3}$ நீர்க்கரைசல்களின் $H^+_{(aq)}$ செறிவுக்கு பின்வருவனவற்றில் எது சரியான வரிசை?
1) HF < HCl< HBr < HI 2) HF < HCl< HBr =HI
3) HF < HCl= HBr =HI 4) HF = HCl= HBr = HI 5) HF = HCl< HBr <HI

25. ஒரு அல்ககோல் L ஆனது சூடான செறி $H_2SO_4$ உடன் நீரகற்றப்பட்டு சேர்வை M I கொடுத்தது. M I ஐதான $H_2SO_4$ஆல் நீரேற்றிய போது மீண்டும் L ஐ கொடுத்தது. L ஒரு வழி அற்ககோல் ஆகும். L ஆனது செறி HBr உடன் தாக்கி வழி ஏலைட்டும் பின் மிகை செறி $NH_3$ உடன் தாக்கி முதல் அமீனையும் தந்தது. L ஆனது பின்வருவனவற்றுள் எது?

1) $CH_3 - CH(CH_3) - CH(OH_3) - CH_3$
2) $CH_3 - CH_2 - CH(OH_3) - CH_3$ ; $OH_3$
3) $CH_3 - CH(CH_3) - CH_2OH$
4) $CH_3 - C(CH_3) - CH_2 - CH_3$
5) $H - O - CH_2 - CH(CH_3) - CH_2 - CH_3$

26. a, b, c ஆகிய மூன்று சுயாதீன மூலிகங்களையும் கவனத்தில் கொள்க

a) $CH_3 - CH_2$ b) $CH_3 - C(CH_3)(H)$ c) $CH_3 - C - CH_3$

இம்மூலகங்களின் உறுதி நிலைக்கான வரிசை
1) c > b > a ஆகும் 2) a > b > c ஆகும் 3) b>c>a ஆ(
4) c > a > b ஆகும் 5) b > a > c ஆகும்

27. செறி $HNO_3$ உம் செறி $H_2SO_4$ உம் சேர்ந்த கலவையுடன் தொலுயீனை நைத்திரேற்றம் செய்த போது பின்வரும் இனங்களுள் ஒரு இடைநிலைப் பொருளாக உருவாகாதது எது?




1) 2) 3) 4) 5)

28. $CH_3 - CH_2 - COOH \rightarrow CH_3 - CH_2 - C(CH_3)(CH_3) - OH$ எனும் மாற்றத்தை செய்வதற்கு

பின்வரும் தாக்க ஒழுங்கில் எது பொருத்தமானது?

$A \xrightarrow{1)\ PCL_5;\ 2)\ CH_3MgI;\ 3)\ H^+ | H_2O} B$

$A \xrightarrow{1) CH_3OH/H^+;\ 2)\ CH_3MgI;\ 3)\ H^+ / H_2O} B$

$A \xrightarrow{1)\ LiAlH_4;\ 2)\ Cu/300^oC;\ 3)\ CH_3 / MgI} B$

$A \xrightarrow{1)\ LiAIL;\ 2)\ Cu/ 300^0C;\ 3)\ CH_3MgI} B$

5) மேலுள்ள 1), 2), 3) பயன்படுத்தலாம்

29) ஒளி முன்னிலையில் மீதேனுடன் $Cl_2$ இன் சுயாதீன மூலிகத் தாக்கத்தின்போது பின்வரும் படிகளில் எது இடம் பெறாது?
1) $\dot{C}H_3 + \dot{C}H_3 \rightarrow C_2H_6$ 2) $\dot{C}H_3 + \dot{C}H_2Cl \rightarrow C_2H_5Cl$
3) $CH_3Cl + \dot{C}H_2 \rightarrow CH_3{}^-CH_2{}^-Cl$ 4) $CCl_3 + Cl \rightarrow CCl_4$
5) $CHCl_2 + Cl \rightarrow CHCl_3$

30) பின்வரும் சேர்வைகள் A, B, C ஆகியவற்றை கவனத்தில் கொள்க.

(A) (B) (C)

$CH_3 - C \equiv C - H$




பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானது
1) $NaOH_{(aq)}$ ஐச்சேர்த்தல் A, B, C மூன்றையும் உப்புக்களாக மாற்றும்
2) $NaOH_{(aq)}$ ஐச்சேர்த்தல் A, C ஐ மாத்திரம் உப்புக்களாக மாற்றும்
3) $Na_2CO_3$ ஐச்சேர்த்தல் B, C ஐ மாத்திரம் உப்புக்களாக மாற்றும்
4) Na ஐச்சேர்த்தல் A, B, C மூன்றையும் உப்புக்களாக மாற்றும்
5) $NH_{(aq)}$ ஐச்சேர்த்தல் B, C ஐ மாத்திரம் உப்புக்களாக மாற்றும்

31 தொடக்கம் 40 வரை
1) a,b 2) b, c 3) c,d 4) a,d 5) வேறு

31) இலத்திரன்கள் சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது ∴ உண்மையானவை?
a) சீரான காந்தப் புலத்தின் திசையில் செல்கையில் வளைந்த பாதையில் செல்லும்.
b) இலத்திரன்கள் β துணிக்கைகளிலும் சக்தி குறைந்தவை.
c) அயன் ஒன்றுக்கு இலத்திரன்களை சேர்க்க முடியாது.
d) இலத்திரன்கள் ஒளியின் கதியில் செல்லக் கூடியவை.

32) அணு ஓபிற்றல், கலப்பு ஓபிற்றல் சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
a) s,p அணு ஒபிற்றல்கள் பக்க வாட்டு மேற்பொருந்துகையிலும் ஈடுபடலாம்.
b) காபன் அணு $sp^4$ கலப்பிலும் ஈடுபடலாம்.
c) காபனின் 2s அணு ஒபிற்றல் கலப்பில் ஈடுபடாமல் பிணைப்பில் ஈடுபடலாம்.
d) sp கலப்பில் ஈடுபட்ட காபன் இரட்டைப் பிணைப்பையும் உருவாக்கலாம்.

33) பின்வரும் எது / எவை $I\ H_2SO_4$ உடன் சூடாக்க ஒரு அமில வாயுவையும் ஐதான NaOH உடன் சூடாக ஒரு மூல வாயுவையும் தரும்?
a) $NH_4NO_3$ b) $(NH_4)_2S$ c) $(NH_4)_2SO_3$ d) $(NH_4)_3PO_4$

34)




எனும் சேளர்வைக்கான இலசயின் உருகற் சோதனையின் விளைவுக் கரைசலில் காணப்படக்கூடிய அயன் இனம் எது / எவை?
a) $SO_4^{2-}$ b) $HSO_4^-$ c) $S^{2-}$ d) $(CN)^-$

35) அனிலீன், அசற்றமைட் ஆகியன சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
a) அசற்றமைட்டை விட அனிலீன் ஒரு வன்மூலமாகையால் அசற்றமைட்டை விட அனிலீன் உயர் $K_b$ பெறுமானம் உடையது
b) N அணுவிலுள்ள தனிச்சோடி இலத்திரன்கள் அனிலீனின் பீனைல் தொகுதியின் இலத்திரன்களுடன் மேற்பொருந்துவதால் அனிலீனை விட அசற்றமைட் வன்மூலமாகும்
c) N அணுவில் தனிச்சோடி இலத்திரன்கள் இருப்பதால் அனிலீன், அசற்றமைட் இரண்டும் சிறந்த கருநாடிகளாகும்
d) அனிலீனிலும் அசற்றமைட்டிலும் $sp^2$ கலப்புக்காபன் காணப்படுகிறது

36) பின்வரும் நிகழ்வுகளில் எது / எவை அகவெப்பச்செயல் முறை / முறைகள் ஆகும்?
a) $O_{(g)} + e \rightarrow O^-_{(g)}$ b) $O^-_{(g)} + e \rightarrow O^{2-}_{(g)}$
c) $O_{(g)} + 2e \rightarrow O^{2-}_{(g)}$ d) $2O_{(g)} \rightarrow O_{2(g)}$

37) தூய நீரின் $1\ dm^3$ இற்கு $NH_4Cl$ இன் ஒரு மூல் சேர்க்கப்பட்டது. பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
a) கரைசலின் PH > 7 b) கரைசலில் $[H^+_{(aq)}]$ > கரைசலில் $[OH^-_{(aq)}]$
c) கரைசலில் $[NH_4^+{}_{(aq)}] \approx 1\ moldm^{-3}$ ஆகும்.
d) கரைசலில் $[H^+_{(aq)}] \approx 1\ moldm^{-3}$ ஆகும்

38) 277K இல் 180g இல் 20g $CaBr_2$ ஐக் கரைப்பதால் தயாரிக்கப்படும் கரைசலின் அமைப்புப் பொருட்கள் சம்பந்தமான பின்வரும் கூற்றுக்களில் எது / எவை உண்மையானது / உண்மையானவை?
(Ca = 40, Br = 80, O = 16, H =1, மேற்படி கரைசலின் அடர்த்தி $1.0gml^{-1}$)
a) கரைசலில் $CaBr_2$ இன் மூலற்றிறன் (மூலல்திறன்) % 0.56 $mol\ kg^{-1}$ ஆகும்.
b) கரைசலில் $CaBr_2$ இன் திணிவுப்பின்னம் % 0.1 ஆகும்
c) கரைசலில் $CaBr_2$ இன் மூல்பின்னம் 1/101 ஆகும்
d) கரைசலில் $CaBr_2$ இன் மூலர்செறிவு = 0.50 $mol\ dm^{-3}$

39) வழக்கமான முறையில் நீரில் கரைந்துள்ள ஒட்சிசனின் செறிவை துணிவதற்கு பின்வரும் தாக்கம் / தாக்கங்களில் எது / எவை ஈடுபடும் / ஈடுபடுகின்றன?
b) அமில ஊடகத்தில் Mn(IV) உடன் $I^-$ இன் தாக்கம்
b) அமில ஊடகத்தில் $S_2O_3^{2-}$ உடன் $I^-$ இன் தாக்கம்
c) கார ஊடகத்தில் Mn(II) உடன் $I^-$ இன் தாக்கம்
d) மாப்பொருளுடன் $I_2$ இன் தாக்கம்

40) $Ca^{2+}$, $Zn^{2+}$ ஆகிய அயன்கள் சம்பந்தமாக பின்வரும் கூற்றுக்களில் எது /எவை உண்மையானது / உண்மையானவை?
b) இரு அயன்களினதும் ஈற்றோடு விழுமிய வாயுவின் இலத்திரன் நிலையமைப்பில் உள்ளன
b) இரு அயன்களினதும் ஈற்றோடு பூரணமாக நிரம்பியுள்ளது
c) $Ca^{2+}$ இன் ஈற்றோடு மட்டும் விழுமிய வாயு அமைப்பிலும் $Zn^{2+}$ இன் ஈற்றோடு மட்டும்பூரணமாக நிரம்பியுள்ளது
d) இரு அயன்களிலும் மொத்த s இலத்திரன்கள் சமமானவை

41 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்கான அறிவுறுத்தல்கள்

| | கூற்று I | கூற்று II | கூற்று II ஆனது கூற்று I ற்கான விளக்கம் |
|---|---|---|---|
| 1) | √ | √ | √ |
| 2) | √ | √ | x |
| 3) | √ | x | - |
| 4) | x | √ | - |
| 5) | x | x | - |

41) கூற்று I : காபனின் இரு பிறதிருப்ப நிலைகளுக்கும் நியம தகன வெப்பவுள்ளுறை சமனாகும்
கூற்று II : காபனின் இரு பிறதிருப்ப நிலைகளும் தகனத்தின் போது ஒரே வகை $CO_2$ வாயுவையே தரும்.

42) கூற்று I : குறித்த ஒரு மூலக சமதானிகள் ஒரே இரசாயன இயல்புள்ளவை
கூற்று II : குறித்த ஒரு மூலக சமதானிகள் ஒரே இலத்திரன் நிலையமைப்புடையவை

43) கூற்று I : புடை ஏலைட் முதல் ஏலைட்டிலும் பார்க்க $AgNO_{3(aq)}$ உடன் உடனடியாக வீழ்படிவை தருகிறது.
கூற்று II : புடைக்காபோனியம் அயன் முதல் காபோனியம் அயனை விட உறுதி கூடியது

44) கூற்று I : சூரிய ஒளி உள்ள போது $Br_2$ உடன் பென்சீன் பிரதியீட்டு தாக்கத்தை நிகழ்த்துகிறது.
கூற்று II : பென்சீனி π இலத்திரன் தொகுதி பிரிவினால் உறுதியடைவதால் பென்சீன் இயல்பாக பிரதியீட்டு தாக்கங்களை தருகிறது.

45) கூற்று I : $CH_3COO^-Na^+_{(aq)}$ ஒன்று மென்காரமாகும்
கூற்று II : நீர்க்கரைசலொன்றில் $CH_3COONa$ பகுதி அயனாக்கம் அடைகிறது.

46) கூற்று I : கரைசல் ஒன்றின் தன் வெப்பக்கொள்ளளவினை $Jkg^{-1}K^{-1}$ $Jkg^{-1o}C^{-1}$ என்ற இரு அலகுகளில் அளப்பினும் ஒரு எண்பெறுமானமே காணப்படும்.
கூற்று II : வெப்பநிலை அதிகரிப்பை கெல்வினில், $^oC$ இல் அளப்பினும் ஒரே அளவு ஆகும்.

47) கூற்று I: $NO_{(g)}$ ஆனது $SO_{2(g)}$, $O_{2(g)}$ ற்கிடையேயான தாக்கவீதத்தை அதிகரிக்கச் செய்கிறது
கூற்று II : $NO_{(g)}$ ஆனது $SO_{2(g)}$, $O_{2(g)}$ இற்கிடையிலான தாக்கப்படிகளின் எண்ணிக்கையைக் குறைத்தே தாக்க வீதத்தை அதிகரிக்கச் செய்கிறது

48) கூற்று I : $He^+$, H இரண்டினது அயனாக்க சக்திகளும் சமமாகும்
கூற்று II : $He^+$, H இரண்டிலும் முதல் பிரதான சக்தி மட்டத்திலிருந்து $is^1$ இலத்திரனே அகற்றப்படுகின்றது.

(தொடரும்...)

K.சிவத்திரன் B.sc (Hons) ஆசிரியர் யா/இந்துமகளிர் கல்லூரி

# ஈராக் தாக்குதல்களில்; 11 அமெ. படையினர் பலி!

(பாக்தாத்)

ஈராக்கில் நடந்த வெவ்வேறு தாக்குதல்களில் 11 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஈராக்கின் மேற்குப் பகுதி நகரான ரமாடியில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் 6 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதுடன், 30 பேர் காயமடைந்தனர்.

அந்த நகரம் பாக்தாத்திற்கு மேற்கே 60 மைல் தொலைவில் அன்பர் மாகாணத்தில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தத் தாக்குதல் தொடர்பாக செய்தி வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் மேலதிக விபரம் எதையும் வெளியிடாததுடன் கொல்லப்பட்டவர்கள் அமெரிக்க சிறப்புப் படையினரான ஆறு இராணுவத்தினரா என்பது பற்றி எதுவும் தெரியாது எனவும் குறிப்பிட்டார்.

இதனிடையே, ஈராக்கின் வட



பகுதி நகரான திக்ரிட்டில் உள்ள அமெரிக்க இராணுவத் தளம் ஒன்றின் மீது குண்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டதுடன் சிறிய ஆயுதங்கள் மூலமும் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் ஒரு அமெரிக்கச் சிப்பாய் கொல்லப்பட்டதுடன் 10 படையினர் காயமடைந்துமுள்ளனர்.

தெற்குப் பகுதி கமரா நகரில் நேற்று அதிகாலை அமெரிக்க வாகனத் தொடர்அணி மீது நடத்தப்பட்ட இன்னொரு தாக்குதலில் 6 அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டனர்

ஆர்.பி.ஜி.கள் சிறு ஆயுதங்கள் மூலம் நடத்தப்பட்ட இத் தாக்குதலின்போது, வாகனத் தொடர் அணியில் இருந்த வாகனங்கள் பல்வும் தீக்கிரையாக்கப்பட்டன.

இதேவேளை வட மேற்கு பாக்தாத்தில் இன்னுமொரு தாக்குதலில் 2 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டதாகம் இருவர் காயமடைந்ததாகவும் தெரிய வருகிறது.

கடந்த ஏப்ரல் முதலாம் திகதிக்கு பின்னர் ஈராக்கில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 151 அமெரிக்கப் படையினர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# சேர்பிய பிரதமரைக் கொலை செய்ய திட்டம் வகுத்தவர் பொலிஸாரிடம் சரண்

சேர்பியப் பிரதமர் சோரன் டியின் யிக்கின் கொலைக்கு திட்டம் வகுத்தவர் எனக் கருதப்படும் சந்தேகநபர் லுகோவிக் - சேர்பியன் பொலிஸாரிடம் சரண் அடைந்துள்ளார். இவர் உடன் கைதுசெய்யப்பட்டுள்ளதாக சேர்பிய உள்துறை அமைச்சர் டிரகன் ஜொசிக் தெரிவித்துள்ளார். சேர்பிய பிரதமர் டியின்யிக் 2003 ஆம் ஆண்டு தலைநகர் பெல்கிரேட்டில் துப்பாக்கிதாரி ஒருவரினால் கொல்லப்பட்டிருந்தார். பிரதமரின் கொலையில் மேலும் 12 பேர்வரை குற்றம் சுமத்தப்பட்டிருந்தனர்.

தலைமறைவாக இருந்த லுகோவிக் பெல்கிரேட்டில் அமைந்துள்ள தனது இல்லத்தின் முன் தோன்றி அங்கிருந்த காவலாளியிடம் சரணடைய விரும்புவதாக தெரிவித்திருந்தார்.

39 வயதுடைய லுகோவிக் சேர்பியாவின் பிரத்தியேக படையொன்றில உயர் அதிகாரியாக முன்னர் கடமையாற்றியிருந்தார். சேர்பியாவின் காலஞ் சென்ற பிரதமர் டிஜின்டிக் தனது பதவிக்காலத்தில் திட்டமிட்டு நடத்தப்படும் கொலைக் கும்பல்களை கட்டுப்படுத்துவதிலும் முன்னாள்



ஜனாதிபதி மிலோ செவிக்கை போர்க்காலத்து குற்றவாளியாக அறிவித்து சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தார். இவை தொடர்பாகவே பிரதமர் சோரன் கொல்லப்பட்டதாக அறியப்பட்டது.

பிரதமரை சினைப்பர் துபபாக்கி மூலம் கொலைசெய்த துப்பாக்கிதாரி எனக் கருதப்படும் சந்தேகநபர் தற்சமயம் சிறையில் உள்ளார். அத்துடன் பொலிஸாரின் வற்புறுத்தல் மூலமே கொலையாளி என சந்தேகப்படுபவரிடமிருந்து வாக்குமூலம் பெறப்பட்டதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## பொறியியலாளர் கொலையை அடுத்து

# சவுதியின் யன்பூ நகரத்திலிருந்து வெளிநாட்டு பணியாளர் வெளியேற்றம்!

சவுதி அரேபியாவின் துறைமுக நகரான யன்பூ நகரிலிருந்து வெளிநாட்டு அதிகாரிகள் வெளியேற்றப்பட்டு வருகின்றனர். சவூதியில் மேற்கு நாடுகளின் நிறுவனங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 5 பேர் கொல்லப்பட்ட பின்னரே இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அமெரிக்க நிறுவனமான எக்சொன் - மோபிலில் கடமை புரிந்த பொறியியலாளர்களே கொல்லப்பட்டிருந்தனர்.

இதனால் அந்த ஸ்தாபனத்தில் கடமைபுரிந்த 90 வெளிநாட்டு பணியாளர்களும் அவர்களது குடும்பத்தவரும் வெளியேற்றப்படவுள்ளனர். கூடுதலான பணியாளர்கள் அமெரிக்கர்களாக இருந்தபோதும், பிரித்தானியா அவுஸ்ரேலியா, பிலிப்பைன்ஸ், இந்தியா ஆகிய நாடுகளின் பிரஜைகளும் கடமையாற்றி வந்துள்ளனர். இதனால், இந்த ஸ்தாபனம் தனது பணிகளை நிறுத்தியுள்ளது.

இந்தக் கொலைச்சம்பவம் நடைபெற்ற வேளையில், கொல்லப்பட்டவர்களில் ஒருவர் கார் ஒன்றில் கட்டியிழுத்துச் செல்லப்பட்டதாக நேரில்



அவதானித்தவர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால், இதனை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

வெளிநாட்டவரைக் குறியாகக் கொண்டு சவுதியில் இஸ்லாமியத் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் இதுவரை ஐம்பதிற்கும் மேற்பட்ட வெளிநாட்டவர் கொல்லப்பட்டுள்ளனர்.

# பாகிஸ்தானில் தாக்குதல் 3 சீன பொறியியலாளர் பலி

கார்க் குண்டு வெடிப்பில் தென் மேற்கு பாகிஸ்தானில் மூன்று சீன பொறியியலாளர்கள் கொல்லப்பட்டும் மேலும் ஒன்பது பேர் காயமுற்றதாகவும் பொலிஸாரும் அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பொறியியலாளர்கள் தமது கடமைக்கு செல்லும் வேளையிலேயே இந்தச் சம்பவம் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்கள் கவாடர் என்ற நகரத்தில் உள்ள துறைமுகத்தை விஸ்தரிப்பதில் ஈடுபட்டவர்களாவர். கவாடர் ஈரான் எல்லைக்கருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

கவாடர் பொலிஸ் அதிகாரி சாதார்



லாஸ் தெரிவிக்கையில் -

மேற்படி குண்டுவெடிப்பு தற்கொலைச் சம்பவமோ அல்லது றிமோட் கொன்றோலாலான வெடிப்புச் சம்பவமோ என தெளிவாக தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் சீன மற்றும் பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

சாதார் லாஸ் மேலும் குறிப்பிடுகையில் - துறைமுகத்திற்கு அருகில் தரித்து நின்ற குண்டு நிரப்பிய கார், பஸ் துறைமுகத்தை அடையும்போது, வெடித்ததாக தெரிவித்தார். அத்துடன் இந்த குண்டுவெடிப்புக்கு சூத்திரதாரிகள் யார் என்பது புரியாமலிருப்பதாகவும் குறிப்பிட்டார். நாம் இந்த சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதாகவும், இக் குண்டுவெடிப்பு றிமோட் கொன்றோலரால் செய்யப்பட்டதொன்றாகும் என தாம் சந்தேகிப்பதாகவும் குறிப்பிட்டார்.

# இருநாடுகள் தமது தூதுவர்களை கியூபாவிலிருந்து அழைக்க முடிவு!

கியூபத் தலைவர் பிடல் கஸ்ரோவின் புண்படும்படியான பேச்சினால் - மெக்சிக்கோவும், பெருவும் தமது தூதுவர்களை கியூபாவிலிருந்து திருப்பியழைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளன.

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் மெக்சிக்கோ - கியூபாவின் நெருங்கிய நட்புநாடு. கியூபா தமது உள்நாட்டுப் பிரச்சினையில் தலையிடுவதாக குற்றஞ்சாட்டியுள்ள மெக்சிக்கோ தனது தூதுவரை திருப்பியழைத்துள்ளது.

பெரு தனது அறிக்கையில் - கியூபாவின் தலைவர் மேதினக் கூட்டத்தில் உரையாற்றி, தம்மை புண்படவைத்ததாக குறிப்பிட்டுள்ளது.

பெருவின் வெளிநாட்டமைச்சர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

கியூப தலைவர் மனம் புண்படக்கூடிய வார்த்தைகளை பிரயோகித்தார் என்றும், இதற்கான பின்விளைவுகளை அவர் வெகு விரைவில் காண்பார் என்றும், இதனால் இருநாட்டுக்கான உறவு பாதிப்படைந்துள்ளது எனவும் கூறினார்.

மெக்சிக்கோ வெளிநாட்டுச் செயலாளர் லூயிஸ் ஏனெச்ரோ - டெர்பிஸ் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கையில் -

மேதினப் பேச்சினால் கியூபாவுடனான தமது இராஜதந்திர உறவுகள் பாதிப்படைந்துள்ளன. இருநாட்டு நட்புறவுகளும் சீர்குலைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

மெக்சிக்கோவின் உள்துறைச் செயலாளர் சந்தியாகோ செறிலும் இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் பிரசன்னமாகியிருந்தார்.

## உலக நோக்கு

# ஈராக்கில் கைதிகள் துன்புறுத்தல் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது!

பிரிட்டன் படைவீரர்களால் கைது செய்யப்பட்ட ஈராக்கியர்கள் கொடூரமாக தாக்கப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரு பிரிட்டன் வீரர்களால் இக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் 'டெயிலி மிரர்' பத்திரிகைக்கு ஈராக்கிய சிறைக் கைதிகள் மீதான சித்திரவதைகளைப் பற்றி சகல விபரங்களையும் தெரிவித்தார்கள். ஆனால், இராணுவம் இந்த படங்கள் உண்மையானதா என சந்தேகப்படுவதாக குறிப்பிட்டது.

ஆனால், மகாராணியின் லன்காசிறி படைப்பிரிவை சேர்ந்த இந்த இரு படை வீரர்களும் தமது தகவல் சரியானதென்றும் இராணுவத்திற்கு இன்னும் மேலதிக விபரங்களை தெரியும் எனவும் குறிப்பிட்டனர்.

இவ்விரு படைவீரர்களும் தம்மை அடையாளம் காட்ட விரும்பவில்லை. அவர்கள் மேலும் இதைப்பற்றி குறிப்பிடும்போது, பல படங்கள் அழிக்கப்பட்டதாக குறிப்பிட்டனர். கடந்த செப்ரெம்பர் துருப்பு களின் பொருட்கள் சோதனையிட்ட போது, இது நடந்தது. அந்தப் படை வீரர்கள் ஈராக்கை விட்டு வெளியேறும் போதே இச்சோதனை இடம்பெற்றது.

பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளரின் அறிக்கையில், அதிகாரிகள் சிறைக்கைதிகள் பற்றிய படங்களை அறியவில்லை என்றும் அவர்களுக்கு கைதிகளை சரியான முறையில் நடாத்தப்படவில்லை என்பது தெரியவில்லை எனவும் தெரிவித்தனர். மக்களிடம் இப்படியான சம்பவங்கள் நடந்ததற்கான அத்தாட்சிகள் இருப்பின் அதை எமது கவனத்துக்கு கொண்டுவரும்படியும் பாதுகாப்பு அமைச்சு கேட்டுக் கொண்டது. இப்படியான சம்பவங்களை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது எனவும் குறிப்பிட்டார்.

மிரரின் பத்திரிகை ஆசிரியர் பிரஸ் மோர்கன் மேற்படி செய்திகளை பிரிட்டன் அதிகாரிகள் தமக்கு தெரியாது என்று கூறுவதெல்லாம் சாதா




ரண செயல்கள் என்றும் பிரித்தானிய வீரர்களின் இழுக்கான செயல் இது என்றும் தெரிவித்தார்.

சி.பி.எஸ் ஒளிபரப்பு நிறுவனமும் பாக்தாத் சிறைச்சாலையில் ஈராக் சிறைக் கைதிகள் கொடூரமாக அமெரிக்க துருப்புக்களால் தாக்கப்பட்டதை ஒளிபரப்பியது.

அமெரிக்க ஜனாதிபதி தாம் இந்த குற்றச்சாட்டையிட்டு கவலைப்படுவதாக தெரிவித்துள்ளார்.

## காஸா பிரதேசத்திலிருந்து

# யூதக் குடியிருப்புக்களை அகற்றும் வாக்கெடுப்பு தோல்வியில் முடிந்தது

காஸா பிரதேசத்திலிருந்து யூதக் குடியிருப்புக்களை அகற்றுவதற்காக இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் மேற்கொண்டிருந்த வாக்கெடுப்பு தோல்வியடைந்துள்ளது.

ஷரோனின் லிகுட் கட்சியின் 59.5 வீதமான அங்கத்வர்கள் எதிராக வாக்களித்துள்ளனர். வாக்கெடுப்பில் ஏற்ட்டிருந்த தோல்வியை ஏற்றுக்கொண்ட நிலையிலும், தனது திட்டத்தினைக் கைவிடப்போவதில்லை எனச் ஷரோன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டுக்கொண்டிருந்தவேளையில் இஸ்ரேலிய கர்ப்பிணிப் பெண் ஒருவரும் அவரது நான்கு வயது பெண் குழந்தையும் பலஸ்தீன துப்பாக்கி தாரியினால் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவமும் வாக்கெடுப்பில் பிரதமர் ஷரோனின் தோல்விக்கு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. நேற்று பிரதமர் ஷரோன் இஸ்ரேலின் நாடாளுமன்றத்தில் லிகுட் அங்கத்தவர்களுடன் இந்தப் பிரச்சினை தொடர்பாக கலந்தாலோசித்துள்ளார். இதேவேளை - ஷரோனுக்கு ஏற்பட்ட தோல்வியை, இஸ்ரேலிய பத்திரிகைகள் ஷரோனின் நீண்ட கால அரசியலில் அவருக்கு ஏற்பட்ட பாரிய பின்னடைவு எனவும் ஷரோன் தன்னிச்சையாக மேற்கொண்டிருந்த தீர்மானத்தினால் குழப்பத்திற்கு உட்பட்டுள்ளார் எனவும் தெரிவித்துள்ளன.

இதேவேளை - காஸாவில் இருந்த குடியிருப்புக்களை விலக்கிக்கொள்ளும் திட்டம், மேற்குக் கரைப்பிரதேசத்தில் மேலும் கடினமான போக்கினைக் கடைப்பிடிக்க முயற்சிக்கலாமென பலஸ்தீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

வாக்கெடுப்பு தொடர்பாக பலஸ்தீனப் பிரதமர் அகமட் கூரே குறிப்பிடுகையில் பலஸ்தீனம் என்ற ஒரு கூட்டிற்கான பேச்சுக்களுக்கு ஊக்கமளிப்பதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நோர்வே தூதுக்குழுவினரை கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்திப்பர்!

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்று மாலை நான்கு மணியளவில் நோர்வேத் தூதுக்குழுவினை சந்திக்கவுள்ளனர்.

கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெறவுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், கஜேந்திரகுமார், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரே இந்தச் சந்திப்பில் ஈடுபடவுள்ளதாகத் தெரியவருகிறது.

நோர்வே தரப்பில் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் அவர்களது குழுவினர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நோர்வேத் தரப்பினர் நாடாளு மன்றக் குழுத்தலைவரான இரா. சம்பந்தனுடன் தொடர்புகொண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தாம் சந்திக்க வேண்டுமென்று அழைப்பு விடுத்ததனாலேயே இன்று அவர்களுடனான இந்தச் சந்திப்பு இடம் பெறுவதாக இரா.சம்பந்தன் நேற்றிரவு 'நமது ஈழநாட்டிற்கு' தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள சந்திப்பில் மக்களுடைய ஆணையின் அடிபடையில்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தவுள்ளதாகவும் இரா. சம்பந்தன் மேலும் தெரிவிததார்.

## நெடுந்தீவு கடற்பகுதியில்

# காணாமற்போன ஆசிரியரை கண்டுபிடிக்கும் முயற்சி தோல்வி

நெடுந்தீவிலிருந்து - குறிகட்டுவான் நோக்கி நேற்றுமுன்தினம் சென்ற படகிலிருந்து கடும் கடற்கொந்தளிப்பு காரணமாக தூக்கி வீசப்பட்டு காணாமற்போன வண்ணார்பண்ணையைச் சேர்ந்த இரத்தினம் ஜெயசீலனை நேற்று தேடிய போதும் அந்த முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது.

நெடுந்தீவு மீனவர்கள் மற்றும் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நேற்று தேடுதல் நடத்தியதுடன், நெடுந்தீவு கரையோரப் பகுதியிலும் தேடுதல் நடத்தப்பட்டது.

இதேவேளை, சகல தீவுகளிலும், கடற்பிரதேசங்களிலும் கடற்படையினரின் ரோந்துப்படகுகள் தேடிவருவதாகவும், மன்னார் பகுதி கடற்படையினருக்கும் தகவல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (113)

# இந்தியாவுக்கு விருப்பம்...

யிடவேண்டுமென அந்த நாட்டிலுள்ள கட்சிகள் மற்றும் சில பிரிவுகள் விரும்புவதாக, லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

தடைப்பட்டுப்போயுள்ள இலங்கையின் சமாதான முயற்சி மீளவும் ஆரம்பிக்கும்போது, இந்தியா எவ்வகையான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென நான் அண்மைய சந்திப்பில் கதிர்காமரைக் கேட்டேன். இது தொடர்பாக கதிர்காமர் மீள இந்தியா வரும்போது அதனைத் தெரிவிப்பார்.

தற்போது இலங்கையின் பதிலுக்காகவே நாம் காத்திருக்கின்றோம்.

இலங்கையின் சமாதான முயற்சியின் தீர்வென்பது அந்த நாட்டிலிருந்தே வரவேண்டும். அந்த நாட்டிற்குரிய தீர்வை இந்தியா உட்பட சர்வதேச சமூகம் திணிக்கக்கூடாது.

இலங்கை தொடர்பான கொள்கையில் கடந்த காலத்தில் இந்தியா சில தவறுகளை விட்டுள்ளது. ஆனால், தற்போது இலங்கையின் இறையாண்மை போன்றவற்றுக்குள் வரும் தீர்விற்குள் இந்தியா தெளிவான கொள்கையை கொண்டிருக்கிறது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வானது அந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்குள் அமைய வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# மீண்டும் சமாதானப்...

ஜனாதிபதியிடம் இருந்து பல செய்திகளை விடுதலைப்புலிகளின் தலைமைக்குகொண்டு சென்றோம். ஜனாதிபதியின் கருத்துக்களை தமிழ்ச்செல்வன் விடுதலைப் புலிகளின் தலைமைக்குத் தெரிவித்து அது பற்றிக் கலந்துரையாட இருக்கின்றார்.

தமிழ்ச்செல்வன் என்னிடம் தெரிவித்த விடுதலைப் புலிகளின் கருத்துக்களை நாங்கள் ஜனாதிபதிக்குத் தெரிவிப்போம்.

இலங்கையில் எனக்குக் கிடைத்த அனுபவத்தின்படி - எதிர்பார்ப்பதை விட சமாதான முயற்சிகள் நிறைவேறுவதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

அதுபோன்ற நிலையே தற்போது உள்ளது. சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான நிலைமைகள் தெளிவாகத் தென்படுகின்றன.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறையாக மதித்து நடப்போம் என்று ஜனாதிபதியும் தமிழ்ச்செல்வனும் மிகத் தெளிவாக எங்களிடம் தெரிவித்திருக்கின்றனர்.

நோர்வேயின் அனுசரணையைத் தொடர்ந்து பெறுவதற்கு - விடுதலைப்புலிகளுக்குள்ள ஆர்வத்தை தமிழ்ச்செல்வன் எங்களிடம் தெரிவித்தார்.

இதேபோல - கடந்த வாரத்துக்கு முதல் வாரம், இலங்கை ஜனாதிபதி எமது பிரதமரிடம் தொடர்புகொண்டு சமாதான முயற்சிகளுக்கான அனுசரணையை நோர்வே தொடர வேண்டும் என்று, கேட்டுக் கொண்டார்,

அதேபோல, விடுதலைப்புலிகளும் தமது கோரிக்கையை உத்தியோகபூர்வமாக இன்று தெரிவித்துள்ளனர் என்று - நோர்வேயின் விசேட தூதுவர் மேலும் தெரிவித்தார்.

# சமாதான முயற்சிகளில்...

வடிக்கைகளையும் மேற்கொண்டு வந்தன.

ஆனால் இப்போது அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட ஜே.வி.பி கொள்கைகளை மாற்றிக் கொண்டு செயற்திறனற்றுக் காணப் படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் கொள்கை ரீதியான உடன்பாடு இல்லை. இப்படிப்பட்ட நிலையில் எவ்வாறு நோர்வே அரசாங்கத்துடன் செயலாற்றுவது என்பது குறித்து தீர்மானம் எடுப்பார்கள்?

அன்று யானை - புலி ஒப்பந்தம் என்று விமர்சித்தவர்கள் இன்று வெற்றிலை - புலி ஒப்பந்தத்துக்கு வழிதேடுகிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா புலிகளுடன் பேச்சுநடத்த இணக்கம் தெரிவித்துள்ளார். இந்தப் பேச்சுவார்த்தை எந்தக் கொள்கையின் அடிப்படையில் இடம்பெறப்போகின்றது?

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்ததை ஜாதிக ஹெல உறுமய ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது. வட்டமேசை மாநாடு கூட்டப்பட்டு அதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மலையக பிரதிநிதிகள், பௌத்த - இந்து மற்றும் இஸ்லாமிய பெரியார்கள் போன்றவர்களின் கருத்துக்களும் பெறப்பட வேண்டும்.

நோர்வே நாட்டைப் பொறுத்தவரையில் அது இலங்கையின் இனப்பிரச்சினையில் ஏற்பாட்டாளர் நிலையை வகிக்க தகுதி இல்லாத நாடாகும். ஏற்கனவே இடம்பெற்ற பல சம்பவங்களின் அடிப்படையில் நோர்வே ஏற்பாட்டாளர்கள் ஈழ ராஜ்ஜியத்துக்கு ஆதரவாகவே செயற்பட்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பண்டாரநாயக்க ஜாதிக ஹெல உறுமயவின் உதவி எதிர்காலத்தில் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது எனத தெரிவித்திருப்பதானது, அரசாங்கம் நாட்டுக்கு பாதகமான செயலைச் செய்யப் போவதையே காட்டுகிறது.

இந்திய நாடு அயல்நாடு என்ற அடிப்படையில் அதன் உதவியை அரசாங்கம் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பெற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்கம் பிழையான வழியில் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தால் அதற்கு எதிராக நாடாளுமன்றத்துக்கு வெளியேயும், உள்ளேயும் எதிர்ப்பைக் காட்டப்போவதாகவும் அத்துரலியே ரத்ன தேரர் எச்சரித்தார். (01)

## அன்றாடப்....

பெறுபேறுகளின் அடிப்படையில், முன்னேற்றத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடும்.

சமாதான முயற்சிகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மாற்றுவதற்காக பின்னோக்கித் திரும்பமாட்டாது.

இந்த சமாதான முயற்சிகளுக்கு வெளித்தரப்பிலிருந்து தீர்வுகள் எதுவும் நிர்ப்பந்திக்கப்படுவதை முழுமையாக எதிர்க்கிறோம்' என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ ட்ரக் மோதி குடும்பப்பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பகுதியில் இராணுவ ட்ரக் வண்டி மோதிய சம்பவத்தில் குடும்பத் தலைவி ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று கந்தர்மடச் சந்திக்கு அண்மையாக இடம் பெற்றது.

இந்த விபத்தில் யாழ்.பிறவுண் வீதியைச் சேர்ந்த கணேசபிள்ளை திருச்செல்வி (வயது 52) என்ற பெண்ணே படுகாயமடைந்தவராார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுக்காலை 9 மணியளவில் கந்தர்மடம் சந்திக்கு அண்மையாகவுள்ள கோவில் ஒன்றுக்கு சென்றுவிட்டு சைக்கிளில் வீடுதிரும்பிக் கொண்டிருந்த சமயமே இவர்மீது இராணுவ ட்ரக் வண்டி மோதியது.

காயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக காயமுற்ற பெண்ணிடம் இராணுவ பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸாரும் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# இடைக்கால தீர்வு யோசனை...

வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் அரசு இருக்கின்றது என்று எம்மிடம் நோர்வேத் தூதுக்குழு கூறியிருக்கிறது.

எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு நிகழ்ச்சி நிரலை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக - புதிய அரசு கரிசனையுடன் இருக்கிறது என்றும் தெரிவிக்கப் பட்டது.

நிகழ்ச்சி நிரல் வழங்கப்பட்ட பின்தான் பேச்சுக்கள் எவ்வாறு முன்னெடுப்பது என்று தீர்மானிப் போம்.

நாம் எமது நிலைப்பாடு தொடர்பாகவும் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகவும் பேசுவதற்கு ஆயத்தமாக இருந்த நிலையில் அன்றைய ஆட்சி கலைக்கப்பட்டு புதிய அரசு தோற்றுவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகள் போன்றுதான், எமது தலைமையும் பேச்சுக்களை நிகழ்த்தவிருக்கிறது.

இந்தக் கட்டத்தில் - தேர்தல் ஒன்று நடைபெற்று, மக்கள் தமது முழுமையான ஆணையினை எமக்கு வழங்கியிருக்கிறார்கள்.

எனவே - இதன் அடிப்படையில் பேச்சுக்களை முன்னெடுக்கவேண்டிய தேவை எமது தலைமைப்பீடத்துக்கு இருக்கின்றது. இந்த அடிப்படையில் இந்தப் பேச்சுக்கள், சமாதான செயற்பாடுகள் முன்னெடுக்கப் படும் என நான் எதிர்பார்க்கிறேன்.

பேச்சுக்களின் நடைமுறை தொடர்பாக இருதரப்பும் இனிவரும் காலத்தில்தான் நோர்வே அனுசரணை ஊடாக பரிமாறவுள்ளோம்.

இதன்பின்தான், நாம் எமது உறுதியான தர்மானங்களை வெளிப்படுத்துவோம். பேச்சுவார்த்தைகளைப் பொறுத்தவரையில் எந்தவித கட்டுப்பாடுகள் இருப்பின் அதனை எமது தலைமைப்பீடம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது.

கடந்த காலத்தில் எவ்வாறு பேச்சுவார்தைகள் நடைபெற்றதோ- அதே போன்றுதான இனிவரும் காலத்திலும் பேச்சுக்கள் நடைபெறும் என்பதில் எமது தலைமை உறுதியாக உள்ளது. இதனை நோர்வேத் தூதுக குழுவிடம் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

எனவே - இது தொடர்பாக அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் தெளிவுபடுத்துவதாக நோர்வே தூதுக் குழு கூறியிருக்கின்றது.

நாம் இன்று முக்கியமாக கதைத்த விடயம் - கிழக்கில் கருணாவின் அடியாட்களால் இராணுவத்தின் ஒத்துழைப்புடன்தான் - தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது என உணர்கிறோம்.

எனவே - இதற்கு ஒரு நடவடிக்கை எடுப்பது, சமாதான முயற்சிகளையும், யுத்தநிறுத்த உடன்பாட்டையும் தொடர்ந்து கடைப்பிடிக்க ஏதுவாக இருக்கும் என்று நாம் நோர்வேயிடம் தெளிவுபடுத்தியுள்ளோம். இந்த விடயம் தொடர்பாக அரசாங்கத் தரப்பிற்கும், ஜனாதிபதிக்கும் தெளிவுபடுத்துவதாக நோர்வேத் தூதுக்குழு தெரிவித்துள்ளது.

நிச்சயமாக இடைக்கால் நிர்வாகம் தொடர்பாக பேசி, ஒரு தீர்வினை எட்டவேண்டும் என்பது தொடர்பாக, கூறியிருக்கின்றோம்.

இருதரப்பின்மூலம் உருவாக்கப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்த நோர்வேத் தரப்பிற்கும், சர்வதேச கண்காணிப்புக் குழுவிற்கும் தாம் தொடர்ந்து ஆதரவு வழங்குவதாக இலங்கை அரசாங்கமும், ஜனாதிபதியும் உத்தரவாதம் அளித்திருப்பதாக நோர்வேத்தரப்பு எம்மிடம் கூறியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்துப் பேசவேண்டும் என்பதை இன்று உலகம் உணர்ந்திருக்கின்றது. தமிழ் மக்களும் கடந்த தேர்தலில் உணர்த்தியிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகளின் நிலைப்பாட்டிற்கும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கும் பாரிய இடைவெளியில்லை. நாம் எமது கருத்துக்களை தெரிவித்திருக்கிறோம். ஜனாதிபதியும் தமது கருத்துக்ளை நோர்வேத் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்துக்களை நோர்வே தூதுக்குழு பரிமாறி, ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து அடுத்த கட்ட நடவடிக்கைகளை தொடர்வார்கள் என நான் நினைக்கிறேன்.

பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் என்பதில் இந்த சந்திப்புக்கள் நம்பிக்கை தந்துள்ளது.

தென்னிலங்கை நிலைப்பாடுதான் இன்று திடீர் திடீர் என்று மாறுகின்றன. ஊடகங்களின் ஊடாக வெளியிடப்படும் கருத்துக்கள் சில எமக்குத் திருப்தியைத் தரவில்லை. பேச்சுக்களில் புதிய மாற்றம் செய்வது தொடர்பாக எமக்கு நோர்வேத்தரப்பினர்மூலம் எந்தவித தகவலும் கிடைக்கவில்லை.

கடந்த காலத்தில் நடைபெற்று வந்த பேச்சுக்களைப் போலவே, இனிவரும் காலங்களிலும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும்.

பேச்சுக்களில் விடுதலைப் புலிகள் மட்டுந்தான் பங்குபற்றுவார்கள் என்ற சந்தேகங்கள் முற்றுமுழுதாக தவறானவை. எமது மக்களின் அபிலாஷைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்னெடுத்து வந்திருக்கிறார்கள். இதனை சென்றதேர்தல் உறுதிசெய்திருக்கிறது. சில நபர்கள் எமது ஊகங்களைக் கேட்கிறார்கள். நாம் ஊகங்களைக்கூறி நிலைமைகளை குழப்பவிரும்பவில்லை.

சூழ்நிலைக்கு ஏற்ப எமது தலைமைப்பீடம் தெளிவான முடிவு ஒன்றினை எடுக்கும். சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தால் புதிய திருப்புமுனை ஒன்று ஏற்படுமா என்பது தொடர்பாக ஜனாதிபதியின் நிலைப்பாட்டினை எமது தேசிய தலைவருக்கு முன்வைக்க இருக்கின்றோம். இதன்பின்தான் எமது தலைமைப்பீடம் சில முடிவுகளை எடுக்கும் அதனை அறிவிக்கும்.

நோர்வேயிடம் எமது கருத்தினை தெளிவாக எடுத்துக்கூறியிருக்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் நிலைப்பாடுகளில் எந்த மாற்றமும் இல்லை. அரசாங்கமும் ஜனாதிபதியும் மாற்றங்களைக்கொண்டுவந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகள் நேர்மையாகவும், உறுதியாகவும் இருக்கின்றார்கள். நோர்வேயினை மீண்டும் நாம் அழைக்கவேண்டிய தேவையில்லை. ஏனென்றால் தொடர்ந்து அனுசரணையாளர்களாக நோர்வே குழுவினர் பங்காற்றிக் கொணடிருக்கிறார்கள். இதன்காரணமாக கண்காணிப்புக்குழு செயற்பட்டுக்கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான நிலைப்பாடடைக்கொண்டிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகள் பிரசாரம் செய்துள்ளார்கள் என கதிர்காமர் கூறும் கருத்தில் உண்மை இருக்கின்றது. ஏனெனில் கடந்த காலங்களில் எம்மை விமர்சனம் செய்தவர்கள்கூட இன்று வாயடைத்துப்போய் நிற்கின்றார்கள். இதனை கடந்த தேர்தல் நன்கு உணர்த்தியிருக்கின்றது.

கடந்த காலத்தில் பேச்சுக்கள் எவ்வாறு நடந்ததோ, அவ்வாறுதான் பேச்சுக்கள் தொடர்ந்தும் நடைபெறும்.

இலங்கையில் பேச்சுக்கள் நடத்தப்படுவதற்கான சட்டம், சாத்தியக்கூறு எதுவும் இல்லை. சர்வதேச அனுசணையுடன்தான் எமது பேச்சுக்கள் தொடரும். இலங்கை அரசுடன் நேரடியாகப் பேசுவது எந்தக் காலத்திலும் நடைபெறாது.

பேச்சுவார்த்தைகளை எப்போதும் எச்சரிக்கையுடன்தான் மேற்கொண்டோம். இனியும் அவ்வாறுதான் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.